பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 18 | புதன்கிழமை 02.01.2019 | கதிர் 58

**இது ரகசியம் அல்ல!**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்துச் சிதற வைத்து, அக் கட்சியைச் சின்னாபின்னமாக்கும் சூழ்ச்சித் திட்டத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒக்ரோபர் 26 இல் கட்டவிழ்த்த 'மைத்திரி வியூகம்' கடைசியில் 'பூமராங்' ஆக அவரையும் அவரது பக்கம் 02

# ஒருமித்த நாடு 'அவுட்' ஒற்றையாட்சி நீடிக்கும்

## தமிழ்க் கூட்டமைப்பைக் கைவிட்டது ஐ.தே.க.



கொழும்பு, ஜனவரி 02

புதிய அரசமைப்புக்கான வரைவில், ஒற்றையாட்சி அரசு என்ற பதத்தை மூன்று மொழிகளிலும் தெளிவாகக் குறிப்பிடுவதெனவும், பௌத்த மதத்துக்கான முன்னுரிமை தொடர்பான விடயங்களில் எந்த மாற்றங்களையும் செய்வதில்லை என்றும், ஐக்கிய தேசிய முன்னணி முடிவு செய்துள்ளது பக்கம் 11

## யாழ்ப்பாணம் நீதிவானாக போல் நேற்றுப் பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஜன. 02

நீதிபதி அந்தோனி சாமி பீற்றர் போல், யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவானாக நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம பக்கம் 02

## குரே மீண்டும் வடக்கின் ஆளுநராக வரவேண்டும்

### கிளிநொச்சியில் கவனவீர்ப்பு



கிளிநொச்சி, ஜன. 02

வடக்கின் ஆத்மாவைத் தொட்ட தெற்கின் குரேயே மீண்டும் ஆளுநராக வரவேண்டும் எனத் தெரிவித்து நேற்றுக் கிளிநொச்சியில் கவன பக்கம் 11

## இராணுவத் தலைமை அதிகாரிக்கு 10 மேஜர் ஜெனரல்களின் பெயர்கள்

கொழும்பு, ஜன. 02

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி பதவிக்கு 10 மூத்த மேஜர் ஜெனரல்களின் பக்கம் 02

## ஐ.தே.மு. அரசில் இணைவதற்கு அனுமதிக்கவேண்டும் ஜனாதிபதி

### சு.க. முன்னாள் அமைச்சர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 02

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் சிலர் ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசில் இணையத் தனது சம்மதத்தை ஜனாதிபதி வழங்கவேண்டும்எனக் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

அதன் பிரகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் கட்சியின் தலைவர் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்க உள்ளனர் எனக் கூறப்படு பக்கம் 11

## கிளிநொச்சிக்கு நேற்று வந்தது நிவாரண ரயில்!








கொழும்பு, ஜன. 02

வெள்ள இடர் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பக்கம் 11

## ஜனாதிபதியை நேரில் சந்திக்க ஆசைப்படுகிறார் நாமல்குமார

### மிக முக்கிய தகவல்களை வழங்கவேண்டியுள்ளதாம்



கொழும்பு, ஜன. 02

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேரில் சந்தித்து, 'கொலை சூழ்ச்சி' பக்கம் 11

## அமைச்சர்களுக்கு கடிவாளம் போடுகின்றார் மைத்திரிபால

### ஐ.தே.கவுக்கு எதிராகப் புதிய போர்

கொழும்பு, ஜன. 02

அமைச்சர்களினால் மேற்கொள்ளப்படும் அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களின் நியமனங்கள் தொடர்பாக பரிசீலிப்பதற்காக, தனது செயலர் உதய செனிவிரத்ன தலைமையிலான குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். பக்கம் 02

## சந்திரிகாவுக்கு எதிராகவும் மைத்திரி போர் தொடுப்பு

### கட்சிக்குள் கதவடைப்பு

கொழும்பு, ஜன. 02

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித்தலைமையகத்துக்குள், கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவும், அவரது பக்கம் 11

## 90 பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பலை விரட்டியடித்த கொக்குவில் இளைஞர்கள்

### நால்வர் மட்டும் வசமாகச் சிக்கினர்



யாழ்பாணம், ஜன. 02

கொக்குவில் பகுதியில் வாள்வெட்டுக் கும்பலைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

கொக்குவில் காந்திஜீ சனசமூக பக்கம் 11

## தனிக்கட்சி அரசியலை ஐ.தே.க. கைவிடட்டும்

### வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜன. 02

'தனிக்கட்சி அரசியலைக் கைவிடுத்து தோழமைக் கட்சிகளையும் அரவணைத்து செல்லும் வகையிலேயே ஐக்கிய தேசியக்கட்சியின் அரசியல் பக்கம் 11

## சு.கவுடன் கூட்டணி அமைக்கத் தயார்!

### பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஜன. 02

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்க தயார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பக்கம் 11

# ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மைத்திரி - மஹிந்த சேர்ந்து முடிவு

## கூறுகின்றார் எஸ்.பி. திஸநாயக்க

கொழும்பு, ஜன. 02

ஜனாதிபதித் தேர்தலின்போது, எந்தக் கட்சியிலிருந்து வேட்பாளரைக் களமிறக்குவது என்பது தொடர்பில் ஜனாதிபதிக்கும், முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கியே இந்த அரசை அமைத்துள்ளார்.

தற்போது, அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது. இதனால், அரசுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. இதனால், அரசு தொடர்ந்தும் நீடிக்குமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளமையாலேயே நாம் பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

இந்தப் புது வருடத்தில், மாகாணசபைத் தேர்தலை நடத்தி மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டுள்ள வேண்டும். மேலும், சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இந்த அரசுடன் இணைந்துக் கொள்ளவேண்டும் எனச் சந்திரிகா அம்மையார் கூறியுள்ளார்.

ஆனால், அவ்வாறு இணைந்தால் சமஷ்டி அரசமைப்பு,நாட்டின்சொத்துக்களைவெளிநாடுகளுக்கு விற்பது, வங்கிகளைத் தனியார் மயமாக்குவது என அனைத்துக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தலையாட்ட வேண்டியேற்படும்.

அதற்கு அவர்கள் இணங்கினால், தாராளமாக இணையலாம். இதற்கு நாம் எப்போதும் எதிர்ப்பை வெளியிடமாட்டோம். ஐக்கிய தேசியக் கட்சியின் சிலரும்எம்முடன் இணைந்துசெயற்படத்தயாராகவே இருக்கிறார்கள்.

அத்தோடு, நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிகள் உள்ளிட்ட முஸ்லிம், தமிழ், மலையக்கட்சிகளின் கூட்டணியுடன் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளோம் என்பதையும் கூறிக்கொள்ள வேண்டும்.

எனினும், ஜனாதிபதித் தேர்தலின்போது எந்தக் கட்சியிலிருந்து வேட்பாளர்கள் களமிறக்கப்படுவார் என்பதை ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தான் தீர்மானிக்க வேண்டும்.

இது தொடர்பில் அவர்களுக்குள் சிறந்த புரிந்துணர்வொன்று ஏற்பட்டுள்ளது. நாமும் ஆவலுடன்தான் இருக்கிறோம். இதனை இப்போதே கூறுவது சரியல்ல– என்றார். (ஐ)

# 2019 இல் வறுமை ஒழிக்கும் நோக்கத்துடன் செயற்படுக!

## ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

2019 ஆம் ஆண்டு வறுமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிக்கவேண்டும் என ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொலனறுவை மாவட்ட செயலக அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒரு சந்திப்பில் உரையாற்றியபோதே ஜனாதிபதி சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போதைப்பொருள்கள் போன்ற சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் சகல சக்திகளையும் இல்லாதொழித்தல் தொடர்பில் விசேட கவனத்துடன் செயற்படவேண்டும்.அத்தோடு அவற்றைத் தடுக்க நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விசேட வேலைத்திட்டத்தை பலப்படுத்த வேண்டியது அவசியம் – என்றார்

### இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்களை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க பரிந்துரைத்துள்ளார்.

இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னான்டோ ஓய்வு பெற்றமையை அடுத்து, அந்தப் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிப்பதற்கு, தகுதியான அதிகாரிகளின் பட்டியல் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, நேற்று முன் தினம் இராணுவத் தளபதி அனுப்பியுள்ளார்.

10 மூத்த மேஜர் ஜெனரல்களைக் கொண்ட இந்தப் பட்டியலில், மேஜர்ஜெனரல்கள் சவேந்திர சில்வா, சத்யபிரிய லியனகே, அஜித் காரியகரவண, ருவான் குலதுங்க, ருக்மல் டயஸ், தர்ஷன ஹெட்டியாராச்சி, குமுது பெரேரா ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்கியுள்ளன எனக் கூறப்படுகிறது. (ஐ)

# என் வழி தவறென்றால் தைரியமாகக் கூறுங்கள்

## அதிகாரிகளிடம் கல்வி அமைச்சர் கோரிக்கை

கல்வி கட்டமைப்பின் உன்னத நலனுக்காக கட்சி பேதங்கள் பராமல் ஒரே நோக்குடன் செயற்பட வேண்டும் எனக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கோரிக்கை விடுத்தார்.

புத்தாண்டை முன்னிட்டு கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்-கல்வி அமைச்சின்ஊடாக சிறந்த பெறுபேறுகளை பெற்றுகொள்ள முடியுமான கொள்கை மற்றும் தீர்மானங்களை எடுக்க



வேண்டும். இந்தத்தீர்மானங்களை குறிப்பிட்ட கால தவனைக்குள் செயலுக்குகொண்டுவரவேண்டும்.

எதிர்வரும்காலங்களில்கல்வி கட்டமைப்பின் நலனுக்காக அனைவரும் திட்டமிட்டு ஒரே நோக்குடன் செயற்பட்டால் எதிர்பார்த்த இலக்குகளைத் துரிதமாக வெற்றி கொள்ள முடியும்.

தன்னுடைய தனிப்பட்ட கொள்கையை அன்றி அரச கொள்கையையே நான் அமைச்சராககடைப்பிடிக்கின்றேன்.

இதன்படி அனைத்து அரச ஊழியர்களும்அரசகொள்கையை அமுலுக்கு கொண்டு வருவதில் உடன்படுகின்றனர்.

கல்வி துறையின் அபிவிருத்திக்காக தான் தலைமைத்துவம் வழங்குவதுடன் இதன்போது எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களில் தவறுகள் இருந்தால் எந்தவொரு அதிகாரியாக இருந்தாலும் தன்னுடன் பேசி அதனை தீர்த்து கொள்ள முடியும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மக்களின்ஆணையின்ஊடாக ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தின் நோக்கங்களுடன் அரச ஊழியர்களும் செயற்பட வேண்டும்.

அவ்வாறுசெயற்படதவறினால் அரச விரோத செயலன்றி அரச விரோத செயலாகவே அதனைத் தான் கருதுகிறார் எனக் கல்வி அமைச் சர் அகிலவிராஜ் காரியவசம் குறிப்பிட்டார்.

இந்தநிகழ்வில்கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகள் பலரும்கலந்து கொண்டனர்.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியையும் மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றது என அவரது கட்சியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதி நினைத்தது, ஐ.தே.கவில் ரணிலின் பிடியைத் தளரச் செய்து, அவரைக் கட்சியிலிருந்து விலக வைத்து, கட்சியையும் நலிவுறச் செய்யலாம் என்பதுதான்.

ஆனால், நடந்ததோ மறுவழமாக. இந்த அரசியல் சூழ்ச்சியில் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிக பலத்துடனும் வீரியத்துடனும் கட்சியில் பலமான பிடிமானத்துடனும் வலுவாக உயர்ந்திருக்கினறார் ரணில்.

ஆனால் சூழ்ச்சி வியூகத்தை வகுத்த ஜனாதிபதி மைத்திரிபாலவின் நிலையோ இன்று தர்ம சங்கடம்.

கடந்த பொதுத் தேர்தலில் அவரது தலைமையிலான சுதந்திரக் கட்சி 96 எம்.பிக்களுடன் நாடாளுமன்றுக்குள் புகுந்தது. ஆனால் இன்றோ ஒரு டசின் எம.பிக்கள் கூட அவருடன் இல்லை. அவரின் நிலைமை பரிதாபத்துக்குரியது.

அவரது கட்சிலிருந்து வெளியேறி கூட்டு எதிரணி என்று தனித்தரப்பாகவும், பின்னர் பொதுஜனப் பெரமுன என்ற பிறிதொரு கட்சியின் உறுப்பினர்களாகவும் மாறியிருக்கும் தனது எம்.பிக்களுடன் சமரசம்செய்யவேண்டிய கட்டாயம் அவருக்கு.

அவருடன் எஞ்சியிருக்கும் ஒன்று, ஒன்றரை டசின் எம்.பிக்களில் கனிசமானோர் கூட இப்போது ஆளும்ஐக்கியதேசிய முன்னணிப் பக்கம் சாயும் இலக்கில் இருக்கின்றார்கள். அவர்களை ஒன்று சேர்த்து அக்கைங்கரியத்தை ஒப்பேற்றும் பின்புலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இருக்கின்றார் என ஒரு தகவல்.

அத்தகைய தரப்பினர் – அதிருப்திக் குழுவினர் – ஒன்று சேர்ந்து திடீரெனத் தாங்கள்தான் உண்மையான சுதந்திரக் கட்சியினர் என்று கூறிக் கொண்டு கட்சியின் தலைமையகத்தைக் கைப்பற்றி விட்டால் என்ன செய்வது என்று சு.க. தலைமைக்குள் நெருக்கடி. அதனால்தான் தாம் வெளிநாடு போகும் சமயத்தில் கட்சியின் தலைமையகத்தைப் பூட்டி சீல் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார் சு.கவின் தலைவரும் நாட்டின் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

அடுத்து வரும் நாள்களில் அல்லது வாரங்களில் சுதந்திரக் கட்சி மேலும் பிளவுறும். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெற்ற சொற்ப வாக்குகள் கூட இனி வரும் தேர்தல்களில் சு.கவுக்கு கிடைக்காது என்பது தெளிவாகும்.

சாராம்சமாக இலங்கை அரசியலில் சுதந்திரக் கட்சி என்ற தனித்துவமான மாற்றுக் கட்சிக்கு கிட்டிய அரசியல் செல்வாக்கு எல்லாவற்றையும் அது பறிகொடுத்து, அதனை அன்றாடம் காய்ச்சி நிலையில் நடு வீதியில் விட்டுச் சென்ற பெருமையை இந்த ஜனாதிபதி தேடி சுவீகரித்துக் கொள்வார்.

அவரது 'மைத்திரி வியூகம்' கடைசியில் அவரின் கட்சியை துடைத்தழித்து நாசமாக்கும் என்பது நிச்சயம்.

- மின்னல் -

### யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கர் முன்னிலையில் நேற்றுக் காலை அவர் உறுதி உரை எடுத்தார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண சட்டத்தரணிகள் நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போலை வரவேற்றனர்.

கடமைகளைப் பொறுப்பேற்ற அவர், வழக்கு விசாரணைகளை முன்னெடுத்தார்.

பலதுறைகளில் சாதித்தவர் நீதிவான் போல் –

மலையகத்தில் பிறந்த நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், ஆரம்பத்தில் ஆசிரியராகப் பணி புரிந்தவர். அதன் ஊடாக மலையகத்தில் பல துறைசார் விற்பன்னர்களை உருவாக்கியவர்.

பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையைத் தொடர்ந்த அவர், சட்டத்தரணியாக 7 வருடங்கள் சேவையாற்றினார்.

இந்த நிலையில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் அவர் மாவட்ட நீதிபதியாகவும் நீதிவானாகவும் 2017ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். சுமார் 170 வருடங்கள் கொண்ட இலங்கையின் மலையக வரலாற்றில் மூன்றாவதுநீதிபதியாகஅந்தோனி சாமி பீற்றர் போல் நியமிக்கப்பட்டார்.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதியாகவும் நீதிவானாகவும் அவர் 2017ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

“அக்கரைப்பற்று நீதிமன்றானது எனக்குப் பல்கலைக்கழகமாகவே தென்படுகின்றது.இதனால் தான் என்னவோ, புதிய நியமனம் பெறும் நீதிபதிகளை முதல் கடமையைப் பொறுப்பேற்க அக்கரைப்பற்றுக்கே அனுப்புகின்றனர்” என்று நீதிபதி போல், தனது பிரியாவிடையின்போது தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாணம் தொழில் நியாய சபையின் தலைவராக வெள்ளத்தம்பி முகமெட் சியான் நேற்று பதவியேற்றார். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம சங்கர் முன்னிலையில் நேற்று காலை அவர் உறுதி உரை எடுத்தார். அதனைத் தொடர்ந்து அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ஐ)

### அமைச்சர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம்ஐ.தே.க. அரசுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய முனையில் போர் ஒன்றை தொடுத்திருக்கிறார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் செயலர் உதய செனிவிரத்ன தலைமையிலான குழுவின் பரிந்துரைகளுக்குப் பின்னரே, அரச நிறுவனங்களின் தலைவர் பதவிகளுக்கான நியமனங்களை அறிவிக்குமாறு, அனைத்து அமைச்சுக்களின் செயலர்களுக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தமக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று, அமைச்சு ஒன்றின் செயலர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தமது அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அரச நிறுவனத் தலைவர்கள் தொடர்பான பட்டியலை ஜனாதிபதி செயலகத்துக்கு தாம் அனுப்பவுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை அமைச்சர்கள் மத்தியில் தீவிரமான கவலையை ஏற்படுத்தியுள்ளது. அரச நிறுவனங்களுக்கான தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் தமக்குக் கீழ் வருகிறது என்றும், அதில் ஜனாதிபதி தலையீடு செய்ய முனைவதாகவும், அவர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

அமைச்சரவை உறுப்பினர்களின் சிறகை வெட்டும் நோக்கிலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகஐ.தே.க.வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தகைய குழுவொன்றை நியமிப்பதன் மூலம், அமைச்சர்களின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி, தனது அதிகாரத்தை உறுதிப்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்று, தனது பெயரை வெளியிட விரும்பாத மூத்த ஐ.தே.க. அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் இந்த குழுவினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சரவையினால், மேற்கொள்ளப்படும் முக்கியமான அரசதுறை நியமனங்கள் விடயத்தில் மோதல் போக்கு உருவெடுக்கும் என்றும் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஐ)

# அரசமைப்பை ஒருபோதும் மீறமாட்டார் பிரதமர் ரணில்

## அமைச்சர் ராஜித உறுதி

கொழும்பு, ஜன. 02

ஜனாதிபதி அரசமைப்பை மீறினாலும் பிரதமர் அவ்வாறு செய்யமாட்டாரெனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றாகக் கல்வி கற்றவர் என்பதால் அவர் அரசமைப்பை மீறிச் செயற்படமாட்டாரெனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று பயாகல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது உறுப்பினர்கள் 7 பேர் சுயாதீனமாகச் செயற்படுகின்றனர் என அறிவித்துள்ள நிலையில், அரசமைப் பின்படி 30 பேருக்கே அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பை மீறிச் செயற்படமாட்டார் –என்றார்.

# வவுனியா நகரப் பகுதியில் ஆறு கடைகளில் திருட்டு



வவுனியா, ஜன. 02

வவுனியா நகரப் பகுதியில் உள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையத்தில் அமைந்துள்ள 6 வியாபார நிலையங்களில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையத் தொகுதிக்குள் அமைந்துள்ள 6 கடைகளின் கூரைகளைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு உள்ள காசுப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த பணங்களைத் திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சிசிரிவி கமரா பொருத்தப்பட்டிருந்த கடைகளில் நுழைந்த திருடர்கள் அவற்றைச் செயிழக்கச் செய்த பின் திருட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தொகுதியில் 35 வர்த்தக நிலையங்கள் தொடர்ச்சியாக அமைந்துள்ள நிலையில் இரவு 7 மணியளவில் பூட்டப்பட்ட வர்த்தக நிலையங்களின் கூரைகளே பிரிக்கப்பட்டு திருடர்கள் உள்நுழைந்துள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது அந்தத் தொகுதியில் உள்ள சில கடைகள் திறந்து காணப்பட்டுள்ளன. அந்தக் கடைகளில் இருந்தவர்கள் கடைகள் உடைக்கப்பட்டதை அவதானித்து கடை உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் இது தொடர்பாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டையடுத்து சிசிரிவி கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ - 100)

# புத்தாண்டில் பெரும் சவாலை பொறுமையுடன் ஏற்றுள்ளேன்

## விளையாட்டுத்துறையை முன்னேற்ற கைகோக்குமாறு ஹரீன் அழைப்பு



கொழும்பு, ஜன. 02

மலர்ந்துள்ள புத்தாண்டில் கட்சி, நிற, பேதங்களை மறந்து விளையாட்டுத்துறையை முன்னேற்ற முன்வருமாறு, விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் அறைகூவல் விடுத்தார்.

விளையாட்டுத்துறையை, அனைவரது உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் மற்றும் நெருக்கமான ஆண்டாக மாற்றுவேன் என்றும், அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பெருமிதம் அடைந்தார்.

உதயமாகியுள்ள புத்தாண்டில், விளையாட்டுத்துறை அமைச்சின் பணிகளை, நேற்றுக் காலை முதன் முதலாக ஆரம்பித்து வைக்கும் சிறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள், பணியாளர்கள் மத்தியில் அமைச்சர் மேலும் பேசும்போது,

சவால்கள் நிறைந்த ஒரு ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். விளையாட்டுத்துறையில் பல்வேறு சவால்கள் உள்ளன. இந்த ஆண்டில், விளையாட்டுத்துறையின் சவால்களை முறியடிப்பேன்.

விளையாட்டுத்துறை அமைச்சை, மிகவும் இக்கட்டான ஒரு சமயத்தில் பொறுப்பேற்றுள்ளேன். எனினும், அந்தப் பொறுப்பிலிருந்து நான் சற்றும் பின் வாங்காமல், மிகப் பொறுப்புடன் விளையாட்டுத் துறையை முன்னேற் றுவேன்.

அரசியல்வாதிகள் ஆவதும், அழிவதும் விளையாட்டுத்துறையின் மூலமே. இப்படியிருந்தும், இப்பெரும் சவாலை நான் மிகவும் பொறுமையுடன் பொறுப்பேற்றுள்ளேன்.

எனவே, இவ்வமைச்சில் கடமை புரியும் அனைத்து அதிகாரிகளும், ஊழியர்களும் தம்மாலான இயன்ற உதவி ஒத்தாசைகளை வழங்குமாறு அன்பொழுக வேண்டிக்கொள்கின்றேன்.

விளையாட்டுத்துறையை, சரியான பாதையில் இட்டுச் சென்று விட்டே, நான் இங்கிருந்து விடை பெற்றுச் செல்வேன்.

மலர்ந்துள்ள இப்புத்தாண்டில், கட்சி, நிறம், பேதங்களின்றி நமது பணிகளை உற்சாகத்துடனும், விசுவாசம் நிறைந்ததாகவும் முன்னெடுத்துச் செல்ல, அனைவரும் தம்மை அர்ப்பணித்துச் செயல்பட முன்வர வேண்டும்.

இப்புத்தாண்டிலிருந்து எமது பிழைகளைத் திருத்திக்கொண்டு, சரியான பாதையில் எம்மை இட்டுச் செல்வதற்கும், நாம் திடசங்கற்பம் உறுதி பூணுவோம். – என்றார்.

# புதிய வருடத்திலாவது சர்வதேசம் எமது உறவுகளை மீட்டுத் தருமா?

## காணாமற்போனோரின் உறவினர்கள் கேள்வி




கொழும்பு, ஜன. 02

புதிய வருடத்திலாவது சர்வதேசம் தம்மீது கரிசனைக்கொண்டு தமது உறவுகளை மீட்டுத் தரவேண்டுமென காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம், நேற்று 680 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே தமது பிள்ளைகளை இந்த வருடத்திலாவது மீட்டுத் தருமாறு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சர்வதேசத்திடம் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர், பல நாள்களாக நாம் எமது பிள்ளைகளை காண வேண்டுமெனப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றோம்.

இலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் அனைவருமே எம்மை கைவிட்டுவிட்டனர். நாம் தொடர்ச்சியாக சர்வதேசத்தினையே தற்போது எதிர்பார்த்து நிற்கின்றோம். எனவே புதிய ஆண்டிலாவது சர்வதேசம் எம் மீது கரிசனை கொண்டு எமது பிள்ளைகளை காண ஆவன செய்து தரவேண்டும் - என்றனர். (ஐ)

# கிழக்கு மாகாண ஆளுநராக மீண்டும் ரோஹிதவையே நியமிக்கவேண்டும்

## சுபைர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 02

கிழக்கு மாகாண ஆளுநராக மீண்டும் ரோஹித போகொல்லாகமவையே நியமிக்க வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஏறாவூர் பிரதேச அமைப்பாளருமான எம்.எஸ். சுபைர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையினால் அடிப்படை வசதியற்ற குடும்பங்களுக்கு மலசலகூடங்களை அமைத்துக்கொள்வதற்கு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் வீ.யூசுப் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ரோஹித போகொல்லாகம கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டதன் பின்னர் கிழக்கு மாகாணம் பல்வேறு ரீதியில் முன்னேற்ற மடைந்துள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் புல்மோட்டை தொடக்கம் பானமை போன்ற பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆளுநர் மாகாணத்தின் சகல பகுதிகளுக்கும் நேரடியாக விஜயம் செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து பணியாற்றினார்.

கிழக்கிலே வாழுகின்ற மூவின மக்களும் திருப்திகொள்ளும் வகையில் நிதி ஒதுக்கீடுகளை செய்து பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டார். விசேடமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்து அந்த மக்களுடைய வாழ்வாதாரங்களை முன்னேற்றுவதிலே அவர் விசேட கவனம் செலுத்தி செயற்பட்டார்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மூவின மக்களும் நன்மையடையும் வகையில் கூடுதலான அபிவிருத்தித் திட்டங்களுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் நிதி ஒதுக்கீடுகளைச் செய்தார். அந்த அடிப்படையில் ஏறாவூர் பிரதேசத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்கு ஒரு கோடி ரூபா நிதியினையும், கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபா நிதியினையும், அடிப்படை வசதியற்ற மக்களுக்கு மலசலகூட வசதிகளை அமைப்பதற்கும் இவ்வருடம் நிதி ஒதுக்கீடுகளை செய்துள்ளார். இன்னும் பல அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற மக்களின் தேவைகளை அறிந்து கிழக்கு மாகாண ஆளுநர் பணியாற்றி வருகிறார். கிழக்கு மாகாண ஆளுநர் ஒரு மூத்த அரசியல்வாதியாவார். அவர் முக்கிய பல அமைச்சுக்களை வகித்து மக்களுக்கு சேவையாற்றிய ஒருவர். மக்களுடைய தேவைகள், கஷ்டங்களை உணர்ந்தவர். அப்படியான ஒருவரே கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும். ஆகவே ஜனாதிபதி அவர்கள் மீண்டும் கிழக்கு மாகாண ஆளுநராக ரோஹித போகொல்லாகமவை நியமிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

### 'மஹிந்த சிந்தனை' வழியில் புதிதாக 'மைத்திரி வியூகம்'!

தெற்கில் தற்போது கட்டவிழும் சில அரசியல் நகர்வுகளை நோக்கும்போது, கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதி அரங்கேறிய அரசியல் சூழ்ச்சி போன்ற வேறு ஒரு முயற்சிக்கு பிறிதொரு வடிவத்தில் கால்கோள் இடப்படுகின்றதோ என்று அரசியல் அவதானிகள் கருதும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்கவையும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியையும் மீண்டும் ஆட்சிப் பீடத்துக்கு ஏறவிடக்கூடாது என்று காழ்ப்புணர்வோடு கங்கணம் கட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்காக அரங்கேற்றிய சூழ்ச்சி தான் ஒக்ரோபர் 26 அதிரடி அரசியல் மாற்றம். இது எல்லோருக்கும் தெரிந்த பரகசியம்.

தமது அரசியல் குளறுபடித்தனங்கள் எல்லாம் தோற்றுப் போக, ரணிலை வீழ்த்தும் தமது எண்ணம் முறியடிக்கப்பட்ட நிலையில், வேறு வழியின்றி அவரை மீளவும் பிரதமராக நியமித்துப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏற்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து வைத்தால் அடுத்த ஒரு மணித்தியாலத்தில் (ஜனாதிபதி) பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு மக்களுடன் சேர்ந்து போராடப் போய்விடுவேன் என்று தனது கட்சியின் அமைப்பாளர்களுக்கு முன்னால் சூளுரைத்த - பிரதிக்ஞை செய்த - மைத்திரிபால சிறிசேன, அரசியல் கட்டாயத்தினால் - வேறு வழி ஏதுமின்றி - ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கிவிட்டு, தனது சூளுரையை மறந்து தமது பதவியில் தொடர்கின்றார்.

ரணில் மீளவும் பதவியேற்று இரண்டு வாரங்கள் கடந்துவிட்டன. இன்று ரணிலின் அரசின் அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கும் இக்கட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இன்றைய நிலையில் மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய பதவிக் காலத்தின் இறுதி ஆண்டு ஆரம்பித்துவிட்டது. இன்னும் பத்து மாதங்களே அவர் பதவியில் இருக்க முடியும். அதற்குள் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வந்துவிடும்.

ஆனால், ரணிலின் பிரதமர் பதவிக்காலம் இந்த நிலை தொடருமானால் இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்கு நீடிக்கும். 2020 ஒகஸ்ட் வரை பதவியில் அவர் இருக்க முடியும்.

தாம் எதிரியாக நினைத்து பதவியில் இருந்து வெட்டிவிட முயற்சித்த ரணில், தனது ஜனாதிபதி பதவிக் காலத்தின் பின்னரும் பிரதமர் பதவியில் நீடிக்க -

தான் மட்டும் நேரத்துடனும், ரணிலைத் தோற்கடிக்க எடுத்த முயற்சி தோற்றுப்போன அவமானத்துடனும் பதவியிலிருந்து நீங்குவதா என்று மனதுக்குள் புழுங்கும் மைத்திரிபால, அதனால் தாம் பதவிலிருந்து விலக முன்னர் ரணிலைப் பிரதமர் பதவிலிருந்து கழற்றிவிடும் எத்தனத்தில் மும்முரமாக இருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தை மீண்டும் கையில் எடுத்து, ஊதிப் பெருப்பித்து, ரணிலை வீழ்த்தலாம் என்பதுதான் ஜனாதிபதி மைத்திரிபால தரப்பின் புதிய சூழ்ச்சி வியூகம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்த விடயம் தொடர்பாகக் கடந்த மாதம் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, லஞ்ச ஆணைக்குழுவின் இயக்குநர் நாயகம் சரத் ஜெயமான, நிதிப்பிரிவு புலனாய்வுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனிவிரத்ன, மத்திய வங்கியின் பதில் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரை ஜனாதிபதி அழைத்துப் பேசியிருக்கின்றார்.

இந்தக் கூட்டத்தில் பிணை முறி ஊழல் தொடர்பான தடவியல் தணிக்கையை (Forensic Audit) விரைந்து பூர்த்தி செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றார் ஜனாதிபதி.

அது விரைந்து நடந்து வருகின்றது.

பிணைமுறி ஊழல் விவகாரத்தில் கைது செய்யப்பட்டு கடந்த பதினொரு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோருக்கு இப்போதைக்கு வழங்கப்படமாட்டாது என எதிர்பார்க்கப்பட்ட பிணை அனுமதி நேற்றுத் திடீரென அரசுத் தரப்பின் எதிர்ப்பின்றி வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிணைமுறி அறிக்கையை அடுத்து வரும் வாரங்களில் அல்லது மாதங்களில் முழுமையாக வெளியிடச் செய்து -

இவ் விடயம் தொடர்பில் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்ட பிரமுகர்கள் மூலம் ஐ.தே.க. தரப்பில் உள்ள சில முக்கிய புள்ளிகளின் பெயர்களைச் சம்பந்தப்படுத்தி அவற்றைப் பகிரங்கமாக வெளியிடச் செய்து -

ஐ.தே.கவின் பெயரை 'ரிப்பேர்' செய்ய வைத்து, அக்கட்சியையும் அதன் அரசையும் மண் கவ்வ வைப்பது 'மைத்திரி வியூகம்' என சில அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

அந்த 'மைத்திரி வியூகத்தை' கனகச்சிமாக முன்னெடுத்து ஒப்பேற்றுவதற்கான பிரசாரத் தந்திரத்துக்காகவே ஊடகத்துறையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் உறுதியாக நிற்கின்றாராம் ஜனாதிபதி.

முன்னைய 'மஹிந்த சிந்தனை' வழியில்தான் 'மைத்திரி வியூகம்' கட்டவிழ்கின்றது போலும்.

# மொழி அடிப்படையில் எம்.பிக்களை பிரிக்காதீர்!

## விஜித் விஜயமுனி சொய்சா கோரிக்கை

கொழும்பு, ஜன. 02

நாடாளுமன்றில் அங்கம் வகிப்பவர்களை தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் என்று பாராமல், அனைவரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பார்க்க வேண்டும், என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற அவரிடம் கூட்டமைப்பு, மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையிலான ஒப்பந்தம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அவர் இதனைக் கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டமைப்புடன் உடன்படிக்கைக்குச் சென்றதா இல்லையா என்பது குறித்து எமக்குப் பிரச்சினை இல்லை. அதனைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

நாடாளுமன்றில் உள்ள 225 உறுப்பினர்களையும் தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் எனப் பிரித்துப் பார்க்கக்கூடாது. அவர்கள் அனைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களே.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதியான அரசை அமைக்கவேண்டியது எமது பொறுப்பாகும். நாம் நாடாளுமன்றத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாத்து, நாட்டின் நிர்வாகத்தை பலப்படுத்தவேண்டும்.

கடந்த காலங்களில் பிரதமர் இல்லாமல், அரசு இல்லாமல் நாடு திண்டாடியது. குடிசையில் உள்ள ஏழை முதல், மாளிகையில் வாழும் செல்வந்தர்கள் வரையிலும் பாதிக்கப்பட்டனர். அச்சத்தில் காணப்பட்டனர். அவர்களின் அச்சத்தைப் போக்குவதே எமது பொறுப்பாகும் - என்றார். (ஐ)

# சீன - இலங்கை உறவுக்கான எதிர்காலத்தை அனைவரும் கூட்டாகக் கட்டியெழுப்பவேண்டும்

## புத்தாண்டுச் செய்தியில் சீனத் தூதுவர்

கொழும்பு, ஜன. 02

சீன - இலங்கை உறவுக்கான எதிர்காலத்தைக் கூட்டாகக் கட்டியமைக்க வேண்டும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சூ ஆன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஓராண்டில், சீன - இலங்கை உறவு நிதானமாக வளர்ந்து, பல சாதனைகளைப் பெற்றுள்ளது. இரு நாடுகளின் பல்வேறு நிலையான பரிமாற்றங்களும் ஒன்றுக்கு ஒன்று அரசியல் நம்பிக்கையும் மேலும் ஆழமாக்கப்பட்டு வருகின்றன.

இரு நாடுகளுக்கிடையில் மனிதத்தொடர்பும், பண்பாட்டுப் பரிமாற்றமும் மேலும் நெருக்கமாக மாறியுள்ளன.

குறிப்பாக, 2018ஆம் ஆண்டு, இலங்கையில் வெள்ள வறட்சி பேரழிவு அதிகமாக நிகழ்ந்தன. இலங்கைக்கு சீனா 10 இலட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியது.

மேலும், சீனாவால் உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய சிறுநீரக நோய் மருத்துவமனை திட்டப்பணி தடையின்றித் தொடங்கியது. இலங்கை இராணுவக் கழகக் கட்டடம் முடித்துக் கொள்ளப்பட்டு, இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுடன் சேர்ந்து சீனத் தரப்பு கலந்தாலோசனை செய்து, 2018 - 2019ஆம் ஆண்டுக்கான சீன - இலங்கைப் பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தும்.

புத்தாண்டில் புதிய தோற்றம் ஏற்படும். புதிய வளர்ச்சி கால கட்டத்தை சீனாவும் இலங்கையும் வரவேற்கின்றன.

சொந்த நாட்டை முயற்சியுடன் உருவாக்கி, சீன - இலங்கை உறவுக்கான எதிர்காலத்தைக் கூட்டாகக் கட்டியமைக்கவேண்டும். இலங்கைக்கான நம்பகத் தன்மையுள்ள அண்டை நாடாகவும், நல்ல நண்பராகவும், சீரான கூட்டாளியாகவும் சீனா எப்போதும் விளங்குகிறது.

இலங்கையில் அமைதி, நிதானம், செழுமையான வளர்ச்சியை நனவாக்கலாம். இலங்கை மக்கள் இனிமையாக வாழ்க, சீன - இலங்கை நட்புறவு வாழ்க' என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அமைதியாகப் பிறந்தது புது வருடம்



2019ஆம் ஆண்டு ஆங்கில புதுவருடம் நேற்று அமைதியாகப்பிறந்தது. மலர்ந்துள்ள ஆங்கில புது வருடத்தை நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள மக்கள் வெகு விமரிசையாக கொண்டாடினர்.

மலர்ந்துள்ள புத்தாண்டை வரவேற்கும் முகமாக நாடளாவிய ரீதியில் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

தலைநகர் கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரர், பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் கோயில் மற்றும் தெஹிவளை விஷ்ணு கோயில் உள்ளங்கலாக பல ஆலயங்களில் நள்ளிரவு முதல் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

அத்தோடு, கிறிஸ்தவ தேவாலயங்களில் புதுவருட ஆராதனைகள் இடம்பெற்றன.

அதேபோன்று யாழ். நல்லூர் முருகன் ஆலயத்தில் நேற்று காலைமுதல் புதுவருட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர். அதேபோன்று, யாழ். புனித மரியன்னை தேவாலயம், யாழ்.குருநகர் புனித யாகப்பர் தேவாலயம், பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயம் ஆகியவற்றில் நேற்று அதிகாலை விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

புதுவருடத்தினை வரவேற்கும் நள்ளிரவு ஆராதனைகள் வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்திலும் இடம்பெற்றன.

மன்னாரில், நானாட்டான் பங்குத்தந்தை அருட்தந்தை ஜீட் குரூஸ் அடிகளார் தலைமையில் புதுவருட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதேபோன்று மட்டக்களப்பு, கல்முனை போன்ற கிழக்கின் பல பகுதிகளிலுமுள்ள ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

மலையகத்தில் ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. கொட்டகலை மற்றும் கண்டியிலுள்ள ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

புத்தளம் மாவட்டத்திலும் கோயில்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களில் புதுவருட ஆராதனைகள் இடம்பெற்றன. இவற்றில் மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு புத்தாண்டு ஆசியினை பெற்றுக் கொண்டனர். (ஐ)

### நாளை

03.01.2019
வியாழக்கிழமை
நட்சத்திரம்: அனுசம் பி.ப 1.20 வரை
திதி : திரயோதசி பி.ப 5.06 வரை
சுபநேரம் : 8.00 - 9.30 வரை
இராகுகாலம் : 2.00 - 3.30 வரை

# விடுமுறைகள் குறைந்த 2019

மலர்ந்திருக்கும் 2019 ஆம் ஆண்டு வார நாள் விடுமுறை விரும்பிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வாரநாள் விடுமுறைகள் குறைந்த ஆண்டாக 2019 ஆம் ஆண்டு காணப்படுவதே அதற்குக் காரணமாகும்.

இந்த ஆண்டு நிகழும் 23 பொது விடுமுறை தினங்களில் ஒன்பது விடுமுறைகள் வார இறுதி சனி, ஞாயிறு நாள்களில் வருகின்றமையால் விடுமுறை தினங்களின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவு குறைந்துள்ளது.

இவ்வருடம் சித்திரைப் புத்தாண்டு சனி, ஞாயிறு தினங்களில் வருவதுடன், வெசாக், பௌர்ணமி விடுமுறையும் சனி, ஞாயிறு தினங்களில் வருகின்றன.

இவ்வாறு வார இறுதித் தினங்களில் வரும் விசேட தினங்கள் 15 ஆகக் காணப்படுகின்றன. பௌர்ணமி தினங்கள், தீபாவளி பண்டிகை, நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் உள்ளிட்ட சில விடுமுறைகளும் ஞாயிறு தினங்களில் அமைந்துள்ளன. 20 வர்த்தக விடுமுறைகளில் 8 விடுமுறைகள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டில் 26 பொது விடுமுறை நாள்களில் நான்கு நாள்கள் மட்டுமே வார இறுதி நாள்களில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டவிரோத துப்பாக்கிகளை கைப்பற்ற பூஜித் பணிப்புரை

கொழும்பு, ஜன. 02

நாடளாவிய ரீதியில் சட்டவிரோத துப்பாக்கிகளை கைப்பற்றுவதற்காக விடேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர அறிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பணிப்புரைக்கமைய புதுவருடமான நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் மூன்று மாதங்களுக்கு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# சம்பந்தனின் பதவியை காப்பாற்ற வேண்டும்!

## தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை



நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தொடர்ந்தும் வகிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு அரசு தன்னால் முடிந்த சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் கூறியிருப்பதாவது –

அண்மைய அரசியல் நெருக்கடியின் பின்புலத்தில் நோக்கும்போது நாடாளுமன்றத்தைக் கலைத்ததில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அரசமைப்பை மீறிச் செயற்பட்டிருப்பதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த அதேவேளை, இரா.சம்பந்தனின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட எந்தவொரு தரப்புடனும் பேரம் பேசாமல் அரசமைப்பின்பிரகாரம் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்குக் கோட்பாட்டின் அடிப்படையில் அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தது.

ஆனால், அரசியல் நெருக்கடியின் முடிவில் கூட்டமைப்பு அரசியல் ரீதியில் சிக்கலான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதாவது, அரசியல் நெருக்கடியின்போது தாங்கள் கடைப்பிடித்த அணுகுமுறைகளினால் தமிழ் மக்கள் பெற்றிருக்கக் கூடிய பயன் என்று எதையும் தங்கள் வாக்காளர்களுக்குக் காண்பிக்க இயலாத வர்களாகக் கூட்டமைப்பின் தலைவர்கள் இருக்கிறார்கள். அவ்வாறு பயன் எதையும் காட்ட முடியாமல் போகுமேயானால் தீவிர தமிழ்த் தேசியவாதக் கட்சிகளின் பிரசாரங்களின் விளைவாக கூட்டமைப்பின் அரசியல் பலம் அருகிப்போய் விடக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டமைப்புக்கு நாட்டுக்குள்ளும் வெளியேயும் ஓர் உத்தியோகபூர்வ மதிப்பு அந்தஸ்தை வழங்கியது. கூட்டமைப்பின் தலைவர் நாட்டின் உயர்மட்டத் தலைவர்களின் வரிசையில் ஒருவராகவும் விளங்கக்கூடியதாக இருந்தது. இது கூட்டமைப்புக்கோ அல்லது அதற்கு வாக்களித்த தமிழ்ச் சமூகத்துக்கோ வெறுமனே ஓர் அடையாளபூர்வமான கௌரவம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டமைப்புக்கு முக்கியமாக இருந்ததற்கு மிகுந்த நடைமுறைக் காரணங்களும் உள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பிலான சர்ச்சையில் கூட்டமைப்பு நீதிமன்றத்தை நாடுவதற்கான நடவடிக்கைகளுக்குத் தயாராவதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

சுய நலன்களின் அடிப்படையில் செயற்படுகின்ற அரசியல் தலைமைத்துவங்களைப் போலன்றி , நீதிமன்றங்கள் தர்க்கநியாயத்துடன் பிரச்சினைகளை அணுகக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளன என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் முன்னிலையில் கூட்டமைப்பினால் இரு முக்கிய வாதங்களை முன்வைக்க முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி சிறிசேன அரசின் அங்கமாக இருக்கிறார். அதனால் அவரின் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எதிர்க்கட்சித் தலைவராவது தர்க்க நியாயத்துக்குப் பொருந்தாது. ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் தன்வசம் வைத்திருக்கிறார்.

இரண்டாவதாக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஓர் அங்கமாக இல்லாத ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிக்க முடியாது. இத்தகையதொரு சூழ்நிலையிலே, எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்கு கூட்டமைப்பு முன்னெடுக்கக் கூடிய முயற்சிகளை ஆதரிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது – என்றுள்ளது. (ஐ)

# புதிய அமைச்சரவையின் முதல் கூட்டம் இன்று

கொழும்பு, ஜன. 02

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் 29 அமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# பல மாகாணங்களில் கடும் குளிர்

கொழும்பு, ஜன. 02

நாட்டின் பல மாகாணங்களில் தொடர்ச்சியாகக் கடும் குளிர் நிலவுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளதாக வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

வானிலை அவதான நிலையம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, மத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் நாள்களில் தொடர்ச்சியாகக் கடும் குளிர் நிலவுமென அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் அதிகரித்து வீசக்கூடுமெனவும் இதன்படி தென்கிழக்குத் திசையின் ஊடாக செல்லும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 – 40 கிலோ மீற்றராக அமையுமெனவும் வானிலை அவதான நிலையம் மேலும் கூறியுள்ளது.

அதேபோன்று, மன்னார் முதல் புத்தளம்–கொழும்பு ஊடாக களுத்துறை வரையான கடற்கரைக்கு அப்பாலுள்ள கடற் பிரதேசங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 50 – 60 கிலோ மீற்றராக அமையுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆகையால் கடற்றொழில் புரியும் தொழிலாளர்கள், தங்களுடைய வேலைகளை அவதானத்துடன் மேற்கொள்ளுமாறு வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# இராணுவம் நடத்தும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கூட்டமைப்பு செயற்படாது

## சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா எம்.பி. உறுதியளிப்பு





முல்லைத்தீவு, ஜன. 02

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா சந்தித்துக் கலந்துரையாடினார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களை இடைநிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளதாகக் கூறப்படும் நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

துணுக்காய் நந்தகுமார் நகரில் உள்ள முன்பள்ளியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பைத்தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா –

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் சேவையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பாகப் பல தவறான முடிவுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்கிறது என்று ஊடகங்கள் வாயிலாக பல தவறான செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன.

இன்று நான் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் கோட்டங்களைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் சேவையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களை சந்தித்தேன். இதன்போது இந்த முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பான கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று கதைத்திருக்கிறோம். என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்பது தொடர்பாக அவர்களுக்குத் தெரியவில்லை. அதனை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியபோது தான் விளங்கியது எமது நிலைப்பாடு. ஊடகங்களில் தவறான செய்திகள் வந்துள்ளன என்பதனை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அவர்கள் தாங்கள் முற்றுமுழுதாக கல்வித் திணைக்களத்தோடு இணைந்து சேவையாற்றுவதற்கு விருப்பத்தைத் தெரிவிக்கின்றனர். கல்வித் திணைக்களத்தின் கீழ் சேவையாற்ற சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அவர்கள் 2 வருட பட்டப்படிப்பை முடித்திருக்கிறார்கள். அவர்களைச் சேவையில் இணைக்கும்போது வயது உள்ளிட்ட காரணங்களால் புறக்கணிக்கக்கூடாது என்பதைத் தெரிவித்தனர்.

இவர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படாது என்பது உறுதி. இந்த ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் ஊடாக வழங்கப்படும் சம்பளத்தை கல்வித் திணைக்களம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுத்து கல்வித்திணைக்களத்தின் கீழ் கொண்டுவருவதே எமது நிலைப்பாடு – என்றார். (ஐ)

# பிளாஸ்டிக் பொருள்களின் பாவனைக்குத் தடை தமிழகத்தில் நேற்று முதல் முழு நடைமுறைக்கு

சென்னை,ஜன.02

**தமிழகம் முழுவதும் பிளாஸ்டிக் பொருள்கள் மீதான தடை நேற்று புதுவருடத் தினம் தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது. அரசின் முடிவுக்கு ஒத்துழைக்காதோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எச்சரித்துள்ளது.**



தமிழகம் முழுவதும் ஜனவரி முதல் 14 வகையான பிளாஸ்டிக் பொருள்களின் பாவனையைத் தடை செய்வதாக, உலக சுற்றுச்சூழல் தினமான கடந்த ஜூன் 5ஆம் திகதி, சட்டப்பேரவையில் முதல்வர் கே.பழனிசாமி அறிவித்தார்.

அதன்படி 14 வகை பிளாஸ்டிக் பொருள்கள் மீதான தடை நேற்று நடைமுறைக்கு வந்தது.

இதனால் சில தினங்களுக்கு முன்பே வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகள் பலவற்றில் பிளாஸ்டிக் பைகளை இருப்பு வைக்காமல் விநியோகித்துவிட்டன. பெரும்பாலான கடைகளில் 'பிளாஸ்டிக் பைகள் வழங்கப்படமாட்டா. துணிப் பையை கொண்டு வரவும்' என்ற அறிவிப்பு பலகைகள் மாட்டப்பட்டுள்ளன.

சென்னை கோயம்பேடு சந்தை, ஜாம்பஜார் சந்தை உள்ளிட்ட பகுதிகளில் பொது மக்கள் கடந்த சில தினங்களாக பிளாஸ்டிக் பைகளைத் தவிர்த்து, துணிப் பைகளை கொண்டு வந்து காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர்.

சென்னை மாநகராட்சி மற்றும் அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள், உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் பிளாஸ்டிக் பொருள்கள் மீதான தடை மற்றும் அவற்றுக்கான மாற்று பொருள்கள் தொடர்பாக அதிக அளவில் மக்கள் கூடும் வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், பிளாஸ்டிக் தடையை முறையாக செயல்படுத்துவது தொடர்பாகவும், விதிகளை மீறி தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களை வைத்திருந்தால் அவற்றைப் பறிமுதல் செய்வது, அவ்வாறு பறிமுதல் செய் யப்பட்ட பொருள்களை எப்படி அழிப்பது என்பவை தொடர் பான ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலர் ஷம்பு கல்லோலிகர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

(அ)

## ஆதரவற்ற சிசுவுக்கு தேடி வந்து பாலூட்டிய பெண் கான்ஸ்டபிள்

### அவரது மனிதநேயத்துக்குப் பாராட்டுகள்



ஆதரவற்ற குழந்தைக்கு பாலூட்டுவதற்காகப் பெண் பொலிஸ் ஒருவர் விடுமுறையில் இருந்த நிலையிலும் காவல் நிலையம் வந்து பாலூட்டிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் நடந்துள்ளது.

ஹைதராபாத்தில் உள்ள ஓஸ்மானியா அரசு மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு நின்றிருந்த முகமது இர்பான் என்பவரிடம் ஒரு பெண், 2 மாத பச்சிளங் குழந்தையைக் கொடுத்து, தண்ணீர் வாங்கிவரும் வரை குழந்தையை கவனிக்கக் கூறியுள்ளார்.

ஆனால், நீண்டநேரமாகியும் குழந்தையின் தாய் வரவில்லை. இதையடுத்து, இர்பான் குழந்தையை வீட்டுக்கு எடுத்துச் சென்றுள்ளார். ஆனால், குழந்தை பசியால் அழத் தொடங்கியதும் அவரால் ஒன்றும் செய்ய இயவில்லை.

இதையடுத்து, குழந்தையை அப்சல்கஞ் காவல் நிலையத்தில் நடந்த விவரங்களைக் கூறி ஒப்படைத்தார். ஆனால், குழந்தை தொடர்ந்து அழுததால் அங்கு இரவுப் பணியில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் எம்.ரவீந்தர் என்பவர் தனது மனைவி பிரியங்காவுக்கு போன் செய்தார்.

ரவீந்தர் மனைவி, பேகம்பட் காவல் நிலையத்தில் கான்ஸ்டபிளாகப் பணியாற்றி வருகிறார். சமீபத்தில் அவருக்குக் குழந்தை பிறந்ததால், பிரசவ விடுப்பில் இருந்தார். தனது கணவர் நடந்த விஷயங்களைக் கூறியதால், தனது வீட்டில் இருந்து வாடகைக் கார் மூலம் அப்சல்கஞ் காவல் நிலையத்துக்கு வந்தார். அங்கு அழுதுகொண்டிருந்த குழந்தைக்கு அவர் பாலூட்டினார். அதன்பின் குழந்தை அழுகையை நிறுத்தியது.

அதன்பின் அந்தக் குழந்தையை பெட்லாபர்க் பகுதியில் உள்ள மகப்பேறு மருத்துவமனையில் பொலிஸார் ஒப்படைத்தனர். அதன்பின் பொலிஸார் நடத்திய விசாரணையில் அந்தப் பச்சிளங் குழந்தையின் தாய் பெயர் பானா பேகம் என்பதும் சாலையில் குப்பை சேகரித்து பிழைப்பு நடத்தி வருபவர் என்பதும் தெரியவந்தது.

அந்தப் பெண்ணிடம் பொலிஸார் விசாரணை நடத்தியதில் அவர் சுயநினைவற்று முன்னுக்குப் பின் முரணாகப் பேசியதால், அந்தக் குழந்தையை மகப்பேறு மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

அப்சல்கஞ் பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாக இருக்கும் ரவீந்தர், பேகம்பட் காவல் நிலையத்தில் கான்ஸ்டபிளாக இருக்கும் ரவீந்தர் மனைவி பிரியங்காவுக்கு ஹைதராபாத் நகர காவல் ஆணையர் அஞ்சனி குமார் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தி சமூக ஊடகங்களில் வெளியான பின் பெண் பொலிஸ் பிரியங்காவுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

(அ)

## நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாக களம் இறங்குகின்றார் நடிகர் பிரகாஷ்ராஜ்

சென்னை,ஜன.02

தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட போகிறேன் என நடிகர் பிரகாஷ் ராஜ் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடிக்கு எதிராக சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்து வந்தவர் நடிகர் பிரகாஷ்ராஜ். கடந்த 2017 ஆம் வருடம் செப்டம்பர் 5ஆம் திகதி பெங்களூரில் உள்ள ராஜராஜேஸ்வரி நகரில் உள்ள வீட்டில் வைத்து பத்திரிகையாளர் கவுரி லங்கேஷ் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதுகுறித்து பெங்களூருவில் நடிகர் பிரகாஷ் ராஜ் பேசும்பொழுது, கவுரி லங்கேஷ் கொலையை பிரதமரின் ஆதரவாளர்கள் கொண்டாடுகின்றனர் எனவும், இதுபோன்ற விடயத்தில் மவுனமாக இருக்கும் பிரதமர் மோடி தன்னை விடச் சிறந்த நடிகர் என்றும் கூறினார்.

இதற்காக தனக்கு வழங்கப்பட்ட 5 தேசிய விருதுகளைத் திருப்பித்தரவும் தான் தயங்க மாட்டார் என்றும் நடிகர் பிரகாஷ்ராஜ் கூறினார்.

தொடர்ந்து பிரதமர் மோடிக்கு எதிராக அவர் சர்ச்சைக்குரிய வகையில் விமர்சனங்களை வைத்து வந்துள்ளார். இதனால் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் அவதூறு வழக்குக் கூடத் தொடரப்பட்டது.

அதன்பின் நான் ஒருபோதும் அரசியலுக்கு வரமாட்டேன் என மைசூரு நகரில் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பொன்றில் கூறினார்.



இந்தநிலையில், அடுத்தவருடம் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட உள்ளேன் என்று அவர் தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், ஒவ்வொருவருக்கும் புது வருட வாழ்த்துகள். ஒரு புதிய தொடக்கம். அதிக பொறுப்புணர்வு. வருகிற நாடாளுமன்ற தேர்தலில் உங்களது ஆதரவுடன் சுயேச்சை வேட்பாளராக நான் போட்டியிட இருக்கிறேன். தொகுதி பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படும். குடிமகனின் குரல் நாடாளுமன்றத்தில் கூட ஒலிக்கும் – எனத் தெரிவித்து உள்ளார்.


(அ)

## தி.மு.க. அன்பழகன் தொடர்ந்தும் மருத்துவமனையில் சுவாச சிகிச்சை

சென்னை,ஜன.02

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள தி.மு.க. பொதுச்செயலாளர் க.அன்பழகனுக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சுவாசப் பிரச்சினை மற்றும் நெஞ்சு சளியின் காரணமாக அப்பலோ மருத்துவமனையில் டிசம்பர் 28 ஆம் திகதி அன்பழகன் அனுமதிக்கப்பட்டார்.

சுவாசத்தைச் சீராக்குவதற்காக அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். இதில், உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும், அவருக்கு தொடர் சிகிச்சை



தேவைப்படுவதால் இன்னும் சில நாள்கள் அவர் மருத்துவமனையில் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# பிலிப்பீன்ஸில் கனமழையால் பெரு வெள்ளம் நிலச்சரிவில் 68 பேர் சாவு; 19 பேர் மாயம்!

மணிலா,ஜன.02

பிலிப்பீன்ஸில் கொட்டித் தீர்த்த கனமழையை தொடர்ந்து வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 68 பேர் பலியாகினர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான பிலிப்பீன்ஸை ஓர் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 20 புயல்கள் தாக்குகின்றன. இதனால் ஏற்படக்கூடிய பெரு மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் பலியாகும் சோகமும் தொடர்கிறது.



இந்த நிலையில், அந்நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பிகோல் மற்றும் கிழக்கு விசயாஸ் பிராந்தியங்களில் கடந்த சில நாள்களாக இடைவிடாத கனமழை கொட்டித் தீர்த்தது.

இதனால் அந்த 2 பிராந்தியங்களிலும் உள்ள 300 இற்கும் மேற்பட்ட பகுதிகள் பலத்த சேதத்துக்கு உள்ளாகி உள்ளன.

கனமழை காரணமாக நீர் நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஊர்களுக்குள் தண்ணீர் புகுந்து வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

மேலும் மழை மற்றும் வெள்ளத்தைத் தொடர்ந்து அநேக இடங்களில் பயங்கர நிலச்சரிவும் ஏற்பட்டது. இதில் ஏராளமான வீடுகள் மண்ணோடு மண்ணாக புதைந்தன. இதனால் உடைமைகளையும், இருப்பிடத்தையும் இழந்து மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

அநேக இடங்களில் சாலைகளில் பள்ளங்கள் ஏற்பட்டு போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டு உள்ளது. மேலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல்வேறு நகரங்கள் இருளில் மூழ்கின. தகவல் சேவை தொடர்பு முடங்கியது.

மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு தொடர்பான சம்பவங்களில் பிகோல் மற்றும் கிழக்கு விசயாஸ் பிராந்தியங்களிலும் இதுவரை 68 பேர் பலியாகி இருக்கின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் 19 பேர் மாயமாகி உள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. எனவே பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.


மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவின் காரணமாக 1 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு உள்ளனர் என பேரழிவு மேலாண்மை துறை தெரிவித்துள்ளது.

பொலிஸ் மற்றும் அரசு அமைப்புகளை சேர்ந்த மீட்புக் குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## புதுவருடக் கொண்டாட்டக் கும்பலை காரைக் கொண்டு மோதி தாக்கிய வாலிபர்!

### ஜப்பான் டோக்கியோவில் சம்பவம்

டோக்கியோ,ஜன.02



ஜப்பானில் புதுவருட கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கார்க் கொண்டு மோதியதில் 9 பேர் காயமடைந்து உள்ளனர்.

ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரில் ஹராஜுகு பகுதியில் டகேஷிட்டா என்ற தெருவில் மக்கள் புதுவருட கொண்டாட்டத்திற்காக தயாராகி வந்தனர். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான சர்வதேச சுற்றுலாவாசிகள் இங்கு வருவர். புது வருடத்தை முன்னிட்டு இந்த சாலையில் கார் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், நள்ளிரவு நெருங்க 10 நிமிடங்கள் இருந்த பொழுது, இவர்கள் மீது கொலை செய்யும் நோக்கத்துடன் வாலிபர் ஒருவர் சிறிய கார் ஒன்றில் வந்து மோதியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் 9 பேர் காயமடைந்து உள்ளனர். இதில் கல்லூரி மாணவர் ஒருவர் படுகாயமுற்றார். அவருக்கு அறுவை சிகிச்சை நடந்து வருகிறது.

இந்த விபத்து ஏற்படுத்திய வாலிபர் கஜுஹிரோ குசாகாபே (வயது 21) என்பவர் கைது செய்யப்பட்டு உள்ளார். அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வனவிலங்குகள் சரணாலயத்தில் பணியாளரைக் கொன்ற சிங்கம்

### பின்னர் அதுவும் சுட்டுக் கொல்லப்பட்டது



அமெரிக்காவின் வடக்கு கரோலினாவில் உள்ள வனவிலங்குகள் சரணாலயத்தில் உள்ள சிங்கம், 22 வயதுப் பணியாளரைப் பலி வாங்கியது. இதனையடுத்து சிங்கத்தைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

வடக்கு கரோலினாவில் உள்ள கேஸ்வெல் கவுண்டியில் வனவிலங்குகள் சரணாலயம் உள்ளது. இங்கு பயிற்சி பெறுவதற்காக அலெக்சாண்டர் ப்ளாக் என்னும் 22 வயது இளம்பெண் பணியில் சேர்ந்துள்ளார்.

வழக்கமான துப்புரவுப் பணிக்காக தனது குழுவினருடன் உள்ளே சென்றார் ப்ளாக். சரணாலயத்தில் இருந்த ஏராளமான சிங்கங்களில் ஒன்று, கூண்டில் இருந்து தப்பித்தது. அது மனிதர்கள் இருக்கும் இடத்துக்கு வந்த போது, அங்கிருந்த ப்ளாக்கைக் கொன்றது.

மற்றவர்கள் மீது சிங்கம் பாயும் முன், அங்கிருந்த அதிகாரிகள் சிங்கத்தைச் சுட்டுக் கொன்றனர்.

இதுகுறித்து சரணாலயத்தின் தரப்பில் கூறும்போது, "பூட்டப்பட்ட அறையில் இருந்து சிங்கம் எப்படி வெளியே வந்தது என்று தெரியவில்லை. இதுகுறித்து விசாரணை நடந்துவருகிறது. சிங்கத்தைச் சுட்டுக் கொல்லும் முன்னர், மயக்க மருந்து கொடுக்க முயற்சித்தோம். அந்த முயற்சி தோல்வி அடைந்ததால், வேறு வழியின்றி சிங்கத்தைக் கொன்றோம்" என்று விளக்கம் அளித்துள்ளனர்.

கரோலினா மாகாணத்தில் உள்ள பர்லிங்டனில் சுமார் 45 ஏக்கர் பரப்பளவில் இந்த சரணாலயம் அமைந்துள்ளது. சிங்கம் கொல்லப்பட்டதை அடுத்து, சரணாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

(உ)

## படுகொலையுண்ட பத்திரிகையாளர் கஷோகிஜியின் உடல் பாகங்கள் எடுத்துச் செல்லும் காட்சி அம்பலம்

கொல்லப்பட்ட சவுதி பத்திரிகையாளர் ஜமால் கஷோகிஜியின் உடல் பாகங்களை 3 பேர் எடுத்துச் செல்லும் வீடியோவை துருக்கி வெளியிட்டுள்ளது.

இது குறித்தான செய்தியை துருக்கியின் ஹபர் தொலைக்காட்சி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ளது.


அதில், இஸ்தான்புல்லிலுள்ள சவுதி அதிகாரியின் இல்லத்துக்கு ஜமாலின் வெட்டப்பட்ட உடல் பாகங்களை 3 நபர்கள் பெரிய பை ஒன்றில் எடுத்துச் செல்கிறார்கள். இந்த இல்லம் சவுதி தூதரகத்திற்கு அருகில்தான் அமைந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

ஜமால் கஷோகிஜி சவுதியின் புகழ்பெற்ற பத்திரிகையாளர்.





1980களில் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் வளர்ச்சியிலிருந்து தனது எழுத்துப் பணியைத் தொடங்கியவர். அமெரிக்காவின் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராக இருந்து சவுதி அரசையும், அதன் மன்னர் மற்றும் இளவரசர்களையும் விமர்சித்து ஆங்கிலத்திலும், அரபிக் மொழியிலும் கட்டுரை எழுதி வந்தவர்.



இந்த நிலையில் அவர் துருக்கியில் சவுதி தூதரக அலுவலகத்தில் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இந்தக் கொலை சம்பவத்தில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் சம்பந்தப்பட்டிருக்கிறார் எனக் கூறப்படுவதால் உலக அளவில் சவுதிக்கு எதிரான அதிர்வலை ஏற்பட்டது.

முதலில் இந்தக் கொலைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று கூறிய சவுதி பின்னர் சாட்சியங்கள் வலுவாக இருந்தமையைத் தொடர்ந்து ஒப்புக்கொண்டது. ஆனால் இதில் இளவரசர் முகமது பின் சல்மானுக்குத் தொடர்பு இல்லை என்று கூறி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தது.

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**கணிதப்பிரிவு -**
**(தமிழ் மொழி மூலம் - 3 ஏ)**
ரி.சுகீர்தன், ரி.ஜெயபவன், எஸ்.கோபிநாத், எஸ்.சிவகஜன், ரி.அறிவன், எஸ்.லக்ஸ்சன், எஸ்.ஜமில்ராஜ், ஜி.கஜவரன், எஸ்.லகுபரன், ஏ.ரகத், எஸ். மிதுன்ராஜ், கே.உமா சங்கர், என்.தனராஜ்.
**கணிதப்பிரிவு**
**(ஆங்கில மொழி மூலம் 3 ஏ)**
கே.யதுஷன், எஸ்.கஜனான், எஸ்.ரவிநாத்
**கணிதப்பிரிவு**
**(தமிழ்மொழி மூலம் 2ஏபி)**
கே.டிலக்சியன், ஆர். லக்ஷ்மன், எம். பரத்ராஜ், பி.லக்ஷ்மன், ஜி.நந்தரூபன், சி.நிருசன், எஸ்.செந்தில்குமரன், எஸ்.துசியந்தன், ஈ.நந்தலக்ஷன், வை.வஜி கரன், பி.ரெனோஜன், எஸ். மதுசன், பி.ஜெயசாந்தன், பி.ஜசிதரன், பி.டஜீவ், ஆர். ஹரிஹரன்
**கணிதப்பிரிவு**
**(ஆங்கில மொழி மூலம் 2ஏபி)**
வி.அனுஸ்யந்தன், எம்.பகவான், எல்.கிஷாந், எஸ். சிவஸ்திகன், பி.யதுநந்தனசர்மா
**உயிரியல் பிரிவு**
**(தமிழ் மொழி மூலம் 3 ஏ)**
ஏ. அன்புச்செல்வன், எஸ். சிவப்பிரியன், எஸ். அனோஜன், கே.அஜிலவன்
**உயிரியல் பிரிவு**
**(ஆங்கிலப் பிரிவு 3 ஏ)**
பி.சாம்கின், எஸ்.யனுபன், பி.வைகுந்தன்
**உயிரியல் பிரிவு**
**(தமிழ் மொழி மூலம் 2ஏபி)**
என். பிருந்தாபன், எம். டயஸ், கே.வித்தகன், கே. சிவமைந்தன்
**உயிரியல் பிரிவு**
**(ஆங்கில மொழி மூலம் 2ஏபி)**
ரி.மதுமிலன், என். நிரஞ்சன், ஆர். பிரதீஸ்
**வர்த்தகப்பிரிவு**
வை. ஹரிசங்கர்– 3 ஏ, வி.வத்சாங்கித சர்மா– 2ஏ பி, ஆர்.றோய் நிசான்– 2 ஏபி
**ஆங்கிலத் தொழில்நுட்பம்**
என்.நாகசீலன்– 2ஏபி

## யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி

**கணிதப் பிரிவு -**
எஸ்.கஜானன் 3ஏ, ரி.ரதீஷ் 3 ஏ, வை.துளசியன் 2 ஏபி, யு.குருபரன் 2 ஏபி, ரி.சேதுஜன் ஏ2 பி, வி.பிரணவன் 2 ஏசி, இ.மதிலாயனன் ஏ2பி, ஆர்.ஆதித்தன் ஏ2பி, எம். நகும்பிரதீப் ஏ2பி, வி.சசிதரன் ஏபிசி, கே.குஜிந்தன் 3பி, பி.விதுர்ஷன் 2பிசி, ஜே.லதுர்ஷன் 2பிசி, ஆர்.சான்றோன் ஏ2சி, எஸ்.அஜிந்தன் ஏ2சி, ஆர். பத்மலோஜன் 2பிசி, ஐ.தர்சன் ஏ2சி, ஆர். எஸ். மரீன்ராஜ் பி2சி, பி.பிறிந்தன் 2 பிசி, எம். ஜெயப்பிரதாபன் பி2சி, என். துஷ்யந்தன் 2பிஎஸ், எம். நிதர்ஷன் பி2சி, பி.கௌசிகன் பி2சி, ஆர். ஆதித்தன் 2பிசி, எம்.நிதர்சன் பி2சி, எஸ்.ரமணன் 2பிசி, கே.மனோகரன் ஏசிஎஸ், எஸ்.கபிசாந் பி2சி, கே.கோகுலன் ஏசிஎஸ், ரி.சுதர்ஷன் 3 சி, என்.அருள்பிரசாத் 3சி, ஏ.திவ்யன் பி2எஸ், ஆர்.வித்தியபிரகாஷ் 3சி, பி.சாரங்கன் 3சி, ஆர்.பிரியதர்சன் 2சிஎஸ், ஆர். டிருஷன் ஏசிஎஸ்
**உயிரியல் பிரிவு**
என்.சங்கீர்த்தனன் ஏ2பி, எஸ்.துவாரகி ஏ2பி, எஸ்.வினோஜா ஏபிசி, ஜே.நிதர்சன் ஏபிசி, எப்.ஆனோசன் ஏ2பி, கே.சர்வாங்கி ஏபிசி, ஆர்.ரத்னராஜ் 3 பி, பி.பார்த்தீபன் ஏபிசி, ஜி.உசாஜினி 2ஏசி, ஏ.மதுஷன் 2 பிசி, எஸ்.பிரகாஷ் 2பிசி, எச்.பிரனவி பி2சி, ரி.றதீபன் 3சி, எஸ்.தசாகினி 3சி, கே.சரனியா 3சி, பி.நளீன்பிரசாந்த் 2சிஎஸ், ஐ.அனிஸ் பூளோரிடா 2சி எஸ், கே.கீர்த்தனா 2சி எஸ், ஆர் .துளசிகா பி2 எஸ், பி.நிமல்ராஜ் 2சி எஸ், ஆர். மிதுர்ஷா பி 2எஸ், கே.தங்கேஸ்வரி 2சி எஸ், எஸ்.கெமிஸ்ரா 2சி எஸ், இ.சஜீவன் 2சி எஸ்
**வர்த்தகப்பிரிவு**
ஜி.தனோசன் 3ஏ, வை.மதுரி 3ஏ, பி.பிறேமசாஜினி 2ஏபி, வை.மிதுஷா 2ஏபி, பி.உஷாந்தினி ஏ2பி, பி.நிறோசிகா 2ஏபி, ஏ.சுஜிதன் ஏ2பி, எஸ்.பிரியங்கா 2ஏபி, ஆர்.பிரனிதா ஏபிசி, வி.ரதிப்னா 2ஏபி, பி.யக்சாயினி ஏ2பி, கே.தட்சாயினி 3பி, ஆர்.திசானா ஏபிசி, ஏ.மதியங்கா 2பிசி, ரி.பானுஜா 2பிசி, கே.லக்சியா 2பிசி, வை.கிறிஸ்ரோன் பி2சி, எஸ்.சோபனா பி2சி, எஸ்.சர்வஜனனி 2பிசி, பி.கஜிவன் பி2சி, ஏ.நிமெலா 2பிசி, ரி.நர்மதன் 2பிசி, எஸ்.பிரகாஷ் 3சி, எஸ்.தனுஜா பி2சி, எம். பவித்திரா பி2சி, தி.சோபனா பிசிஎஸ், பி.யதுர்ஷா பிசிஎஸ், கே.கஜரூபன் பிசிஎஸ், சி.கிருயன் 2சி எஸ், ஜி.கஸ்பிரியா 3சி, கே.யசீகரன் 3சி, எம். இனிசா 2சி எஸ், எம்.லிவியினி 2சிஎஸ், கே.சுலோஜன் 2சிஎஸ், ஜே.அமல்ராஜ் பிசிஎஸ்
**தொழில்நுட்பப் பிரிவு**
எஸ்.சிவதர்சன் 2பிசி, ஆர்.சிறிராஜதீபன் 3 பி, ரி.சுலக்ஷன் பிசிஎஸ், எம். திலக்சன் 2சி எஸ், எஸ்.பார்கவின் பி2எஸ், கே.சனுசன் 2சிஎஸ், என்.நிருசிகன் பி2எஸ்
**கலைப்பிரிவு**
கே.கல்பனா 3ஏ, எஸ். வைஸ்ணவி 3ஏ, எஸ்.யன்சிகா ஏ2பி, எஸ். சங்கீதா ஏ2பி, எஸ்.சரந்குமார் 2பிசி, எஸ்.விதுர்ஷிகா ஏ2பி, எம்.வதனிகா ஏபிசி, எஸ்.நிஸாசனா ஏபிசி, பி.வைஷ்ணவி ஏபிசி, பி.வரப்பிரகாஷ் ஏபிஎஸ், ஏ.டிலக்ஷனா ஏ2பி, கே.நிலக்சன் பி2சி, பி.சரனியா ஏ2சி, ஏ.சயந்தினி பி2சி, எம்.மதுஷா ஏபிஎஸ், கே.கஸ்தூரிஏபிசி, கே.குருசங்கர் பி2சி, ஒ.அமலவாசினி ஏ2சி, பி.யுலசிகா ஏபிசி, எஸ்.லதாஜினி பி2சி, கே.கேதங்கன் ஏ2சி, ரி.ஜனனி ஏபிஎஸ், என்.ஸ்ரீவிஸ்னுகா 3சி, எஸ்.பிருந்தா ஏ2சி, என்.றஜிந்தன் 2சி எஸ், எம்.லவீகா 2 பிசி, ஆர் .மதுஷன் பி2சி, ஜி.ரகுராம் பி2சி, கே.சங்கவி பிசிஎஸ், கே.நிலாசினி பி2சி, ரி.துஷ்யந்தன் 3சி, எஸ்.அம்சா பி2எஸ், கே.பிரஜித் பிசிஎஸ், எஸ்.கோகுலவாசன் பிசிஎஸ்.

## யாழ் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை

**விஞ்ஞானப் பிரிவு -**
ஆங்கில மொழி மூலம் ஏ.அபிலாசா 3ஏ, ரி.துவாரகா 3ஏ, எஸ். சிவபிரியா 2ஏபி, ஜி.தேவந்தி 2ஏபி, எஸ்.அபிராமி ஏபிசி, ரி.மதுராங்கி ஏ2பி,
**தமிழ் மொழி மூலம் -**
கெ.வைஸ்ணவி 3ஏ, எஸ்.டார்ஷிகா 3ஏ, ஏ.தயாசங்கரி 3ஏ, வை.சிவானி 3ஏ, ரி.லக்ஷா 2ஏபி, கெ.கனிஷ்டியா 2ஏபி, வை. கேஷினி 2ஏபி, ஏ.சுவேந்திரா 2ஏபி, எஸ். வேணுகா 2ஏபி, எம்.நிவேதா 2ஏபி, வை. கீர்த்திகா 2ஏபி, ஆர்.தாக்ஷாயினி ஏ2பி, ஜி.தீபனா ஏ2பி, கே.அபர்ணா ஏ2பி, கே.துளசிகா 2ஏபி, எஸ்அபிநயா 2ஏசி, கே.அபிராமி ஏ2பி, எஸ்.கம்யினி ஏ2பி, கே. கஜேந்தினி ஏ2பி, கே.லக்ஷ ஏ2பி, எஸ். சாரங்கா 2ஏபி, ஆர்.ஜதுசா 2ஏசி, பி.ரிஷ்மி லெஸ்லி ஏ2பி, கே.தர்சிகா ஏ2பி, ரி. மாதங்கி ஏ2பி, ரி.கோபிகா ஏ2பி, எம.கார்த்திகா ஏ2பி, கே.மதினி ஏ2பி, ரி.நூர்மிலா ஏ2பி, எஸ்.சாம்பவி ஏ2பி, யு.கஜானி ஏபி, கே.ஜீவித்தனா ஏ2பி, ஐ.ஆரதி ஏ2பி, எஸ். துளஷினி ஏ2பி, எஸ்.ஐஸ்வர்ஜா 2ஏசி, வி.பிரியங்கா ஏ2பி, ஜே.கமேலியா ஏ2பி, ஜி.பரமிதா ஏபிசி, எஸ்.டார்சிகா ஏ2பி, எஸ். மதுஷா 2ஏசி, என்.கிரந்திகா ஏ2பி, ஜி. மதுஷாஏபிசி, எஸ்.சுபநிலா ஏபிசி, ஏ.அசோதா ஏபிசி, பி.கஜானா ஏபிசி,
**கணிதப் பிரிவு**
**(ஆங்கில மொழி மூலம்) -**
பி.சாம்பவி 3ஏ, பி.கஜானி 3பி, எஸ்.தனுஜா ஏபிசி,
**தமிழ் மொழி மூலம் -**
ஏ.கேஷவி 3ஏ, இ.மகிழ்யா 2ஏபி, ரி..அபிவண்ணா–3ஏ, எஸ்.கீர்த்திகா 2ஏசி, கே.சங்கவி 2ஏபி, எம்.மதுஷா 2ஏசி, வி.தனுஜா ஏ2பி, எஸ்.நக்ஷலா ஏபிசி, ஆர். சாம்பவி ஏபிசி, ஏ.அனெற்அபிஷா ஏபிசி, எஸ்.ஆர்த்திகா ஏபிசி, வி.ஜெனோசா 3பி,
**வர்த்தகப் பிரிவு -**
கர்சிகா 3ஏ, எஸ்.லக்ஷியா 3ஏ, ஜே.சாரங்கி ஏ2பி, எஸ்.தூலினி 3ஏ, ஜே.மயூரிகா 3ஏ, கே.கனிஸ்ரா 2ஏபி, எஸ்.சிந்துஜா 2ஏபி, கே.சாலினி 2ஏபி, ஐ.அஜந்தா 2ஏபி, யு.விவேகா 2ஏபி, எஸ்.பிரிதா ஏ2பி, எஸ்.நிவேதா ஏ2பி,
**கலைப்பிரிவு -**
எஸ்.மதுராங்கனி ஏபிசி, எஸ்.தக்ஷாஜினி ஏபிசி,
**தொழில்நுட்பப் பிரிவு -**
ஆங்கில தொழில்நுட்பவியல் பிரிவு -ரி.லக்ஷனா பி2சி, எம்.மதுாலினி 3சி, சி.ஜனுா பி2சி,
**விஞ்ஞான தொழில்நுட்பவியல் -**
பி.மாதுமை 2பிசி, ஜே.பிரின்சினா 2பிசி, எஸ்.சிவதனுஜா பி2சி, வி.வனுசா பி2சி, ஏ.ரமியா 2பிஎஸ், பி.தரங்கிதா பி2சி,

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி

**கணிதப் பிரிவு -**
ஏ.கஸ்ரோ டிரோன் 3ஏ, ஏ.அன்ரன் சிந்துஜன் ஏ2பி, பி.திசான் ஏபிசி,
**உயிரியற் பிரிவு -**
ரி.சஞ்சீவன் ஏபிசி,
**வர்த்தப் பிரிவு -** எஸ்.றொனால்ட் 3ஏ, எம்.டிசாந்தன் 3ஏ, ஆர்.றொசான் 3ஏ, ஜி.ஏனோஷ் 2ஏபி, ஏ.மொறின்ஸ்ரன் ஏ2பி,
**கலைப் பிரிவு -**
ஏ.அர்ஜன்ராஜ் 2ஏபி, இ.பேரின்சன் 2ஏபி, ஏ.ஜெயக்குமாரன் 2ஏபி, ஜெ.சுனில் குமார பீரிஸ் ஏ2பி, வை.ஜெரோன்ஸ் பஸ்ரி 2ஏசி, எம்.எவ்.எக்ஸ்.றஜிதன் 2ஏசி, ஜே. ஜெயதர்ஷன் ஏபிசி, எம்.ஏ.ஜதுசன் ஏபிசி,
**தொழில்நுட்பப் பிரிவு -**
ஆர்.தர்சியப் பிரியன் 3பி, ஏ.ரி.ஜோன் கில்ரன் பி2சி, ஏ. டிலக்ஷன் பி2சி.

## காரைநகர் யாழ்ரன் கல்லூரி

**கணினி விஞ்ஞானப்பிரிவு -**
சு.கஜந்தன் ஏ2பி, சி.செந்தூரன் சி2எஸ்,
**கணிதப் பிரிவு -**
தி.சயந்தன் 2ஏசி, க.ஜெய மதுசன் பிசிஎஸ், சி.நவநீதன் 2சிஎஸ்,
**வர்த்தகப் பிரிவு -** தே.றொபின்சியா 2பிசி,
**கலைப் பிரிவு -**
மோ கிர்சிகா 2பிசி, க.கஜந்தன் பி2சி, ச.பிரதீபா பி2சி, சோ.நிரோஜினி சி2எஸ், ப.துவாரகா சி2எஸ், கே.டிசாந்தன் 3எஸ்,

## யாழ்.ஹாட்லிக் கல்லூரி

**கணிதப்பிரிவு -**
எஸ்.சஜித் 3ஏ, ரி.அபினேஷ் 2ஏபி, எஸ்.கோபிதன் 3ஏ, எஸ்.அசோக்குமார் 2ஏபி, எஸ்.அகல்யன் 3ஏ, ஜே.நிலவன் 2ஏபி, வி.மதியழகன் 2ஏபி, கே.அனுசன் 2ஏபி, பி.கஜன் 2ஏபி, கே.ராகுலன் 2ஏசி, சி.கோணேசன் ஏ2பி, எஸ்.சிவதர்ஷன் 2ஏபி, வி.வினோத் 2ஏபி, ஏ.கெனோசன் 3ஏ, எஸ்.டசிகரன் ஏ2பி, ஜி.ஸ்ரீபரத்வஜசர்மா ஏ2பி, கே.உஷாந்தன் ஏ2பி, எஸ்.நிருஷாந்த் ஏ2பி, ஆர்.ஜங்கரன் 3பி, ஏ.சுமன்ராஜ் ஏபிசி, என்.கரன்ராஜ் 3பி
**விஞ்ஞானப்பிரிவு -**
ஜே.மிதுர்ஷன் 3ஏ, ஆர்.சாருசன் 3ஏ, பி.தஜாபரன் 2ஏபி, ஜே.ஹரிஹரன் 2ஏபி, ஆர்.அனுஷாந்த் 2ஏபி, பி.கஜன் ஏ2பி, ஏ.ஜதுசன் 3ஏ, வி.யதோசன் 2 ஏபி, எஸ். சுலேக்ஜன் ஏபிசி, ஆர்.விதுர்ஷனன் ஏபிசி, ஆர்.தனேஷன் ஏபிசி, எஸ்.அனோத் ஏபிசி, ஆர்.கிருஸ்ஷன் ஏபிசி
**வர்த்தகப்பிரிவு -**
பி.நர்த்தனசர்மா ஏ2பி, என்.ரசாந்தன் 2ஏசி, ரி.மரியநோகன் 3பி, எஸ்.பிரணவன் 2ஏசி, ரி.யதுஷன் 2பிசி, வி.தினேஷ் பி2சி
**கலைப்பிரிவு -**
வி.கிருஷாந்தன் 2பிசி
**பொறியியல் தொழில்நுட்பம் -**
என்.போல்ஜேசுரட்ணம் ஏ2பி, இ.சிந்துஜன் ஏபிசி, ரி.ஜனிஸ்ரன் 2பிசி, வி.கணேஸ் 2பிசி, என்.அனுஷன் பி2சி, வி.செலுமியன் பி2சி
**உயிரியல் முறைமை தொழில்நுட்பம் -**
எஸ்.கிரிதரன் 3பி, ஏ.பிரவிந்தன் ஏபிசி, ஆர்.டினோஸ்ராஜ் பி2சி, ஆர்.லோகராஜ் பி2சி

## மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

**விஞ்ஞானப் பிரிவு -** பா.சங்கீர்த்தனன் 2ஏபி, சி.யகானா 2பிசி, க.கவிப்பிரியா ஏபிசி, கு.லக்சிகா 3சி.
**கணிதப் பிரிவு -**
ஆ.கௌசிகன் 2ஏபி, க.விதுரன் 2பிசி,
**வணிகப் பிரிவு -**
நி.துவாரகேசன் 3ஏ, சி.வினுயா 2ஏபி, வ.தனலக்சன் 2ஏசி, த.அபிராயினி ஏ2பி,
**கலைப் பிரிவு -**
ச.கயலினி 3ஏ, யோ.கௌசல்யா 3ஏ, யோ.தர்சிகா 3ஏ, ரா.ரம்சியா 2பி, தி.உசாந்தி ஏ2பி, அ.தனுசா ஏ2பி, இ.பிரவீனா 3பி, ந.அனந்தினி ஏபிசி, ம.மதுரா ஏபிசி, உ.கிதஸ்தனா ஏ2பி,

## சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**கலைப்பிரிவு -**
ரி. திவ்யா 2ஏபி, கே.குயின்சிகா 2பிசி, எ.எம்.பிரிவீனா 3பி, என். சங்கவி ஏ2சி, கே.ஏஞ்சிதா 2பிசி, ஏ.சர்மிளா ஏபிசி,

## வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**விஞ்ஞானப்பிரிவு -**
எஸ்.திவிஜா 2ஏபி, எஸ்.விஜேந்தினி ஏ2பி, எஸ்.சங்கவி ஏபிசி, ஆர்.ரஜிந்தா 2பிசி, எஸ்.சயந்தவி பி2சி, எம்.சத்தியசந்தியா 3சி, சி.வினுஜா பி2சி, ஆர்.ஜெனந்தினி 3சி, ஆர்.தனுஜா 3சி, என்.துவாரகா 2சிஎஸ், ரி.சிவகௌரிசி2எஸ், எஸ்லக்ஷனா 2சிஎஸ், ஏ.சாலினி 3எஸ்,
**கணிதப் பிரிவு -**
ஜே.துவாரகா 2ஏபி, ஜே.தர்மசுகி 3பி, ஆர்.சிறிபவதாரணி ஏ2சி, கே.தர்சினி பிசிஎஸ், என்.லக்ஷகா 3சி, கே.ஜதுஷா 3சி, ஏ.எமல்டா 2சிஎஸ், பி.மாதுமை சி2எஸ்,
**வர்த்தகப் பிரிவு -**
எஸ்.சுரேக்கா 3ஏ, எம்.துாந்தினி 2ஏபி, எஸ்.தாரகா ஏ2பி, எஸ்.அபிவர்ணா ஏ2பி, ஜி.டுசிக்கா ஏ2பி, ஏ.சங்கீதா ஏ2பி, எஸ். யாழினி பி2சி, கே.சாமந்தி 3பி, எஸ்.துர்க்கா 2பிசி, ரி.குமுதினி 2பிசி, என்.குகேதா 2சி, வை. விஜிந்திரா பி2சி, பி.ஜதுஷா 3சி, பி.மிதுஷாயினி பி2சி, எஸ்.சங்கீதா பிசிஎஸ், கே.விவிசா பி2சி, எம்.பிரியங்கா பிசிஎஸ், பி.சுகன்யா 3சி, பி.சிவரூபி 3சி, எஸ். சிரோஜா சி2எஸ், கே.ஜனனி சி2எஸ், கே.டினோசிகா 3எஸ், பி.அனற்ஜெனிலா 3எஸ், ஜே.ஜெனிஸ்ரலா 3எஸ், ஜே.தனுஜா 3எஸ்,
**கலைப் பிரிவு -**
கே.கமலினி ஏபிசி, எம்.மதுரா ஏபிசி, பி.தீபிகா ஏபிசி, எஸ்.சுலக்சனா 2பிசி, எஸ். அஜந்தினி ஏபிஎஸ், கே.நிலக்ஷா பி2சி, எஸ். நிதுஜா 2பிசி, எஸ்.கிருத்திகா 2பிசி, ஆர். துவாரகா பி2சி, பி.பிரேமினி ஏ2சி, கே. துலக்ஷகா 2பிசி, எஸ்.பவித்திரா பிசி எஸ், வை.சௌமியா பி2எஸ், ரி.திரகா பிசி எஸ், ஜே.நிலக்சனா பிசிஎஸ், ஏ.ஜகுலின்மேரி ஏசிஎஸ், ஏ.ருக்ஷகா பிசிஎஸ், எஸ்.காயத்திரி பிசிஎஸ், எம்.டினிஜா பிசிஎஸ், வி.சிவதர்சனி பிசிஎஸ், எம்.டிலிசனா ஏ2எஸ், ரி.மனோராணி ஏசிஎஸ், ஏ. மாதுமை ஏ2எஸ், எஸ்.கம்யா பி2எஸ்,

## வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

**விஞ்ஞானப் பிரிவு -** ரி.விருஜா 2பிசி,
**கணிதப் பிரிவு -** எஸ்.தர்சி 2ஏபி,
**வணிகப் பிரிவு -**
எம்.சுவர்ணா 2ஏபி, ஏ.சர்மினி 2ஏசி, ஆர். மகியா ஏபிசி, வி.பிருந்தா 3பி,
**கலைப் பிரிவு -**
எஸ்.சித்தாரா 3ஏ, கே.நிதுஜா 2ஏபி, வி. ஜெயானி 2ஏபி, எம்.மதுரா ஏ2பி, ஏ.அனுசிலி ஏபிசி, என்.கனகப்பிரியா ஏபிசி, ரி.கீதாஞ்சலி ஏபிசி,
**வேறுபிரிவு -** ரி.சங்கீர்த்தனா 2பிசி,

## கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

**உயிரியல் பிரிவு -**
எஸ்.கஜலக்ஷன் 3ஏ, பி.நிவேதா பி2சி, எஸ்.நிருபராஜ் 3சி,
**கணிதப் பிரிவு -**
பி.பிருந்தாபன் ஏபிசி, இ.இராஜேஸ்வரன் 3பி, ஜி.சயந்தனா 2பிசி, எஸ்.நிதர்சன் பி2சி, எஸ்.தேனகாசினி ஏபிசி,
**வர்த்தகப் பிரிவு -**
ஆர்.கனிரதன் 2ஏபி, எம்.சோபிகா 2ஏபி,
**கலைப் பிரிவு -**
பி.பிரியதர்சினி 3ஏ, பி.கிருபாலினி 2ஏபி, எஸ்.மேரிபா 2ஏபி,

## வட்டு இந்துக் கல்லூரி

**பொறியியல் தொழில்நுட்பம்**
ரி.தவநீதன் 2ஏபி, கே.டெரிக்ஷன் 2ஏசி, எஸ். சர்மன் 2ஏபி, எஸ்.டக்சன் பி2சி, எஸ்.கபிலன் பி2சி, எஸ்.சிறிரங்கன் 2பிசி, கே.டனுசன் பி2சி
**உயிர் முறைமை தொழில்நுட்பம்**
பி.லக்ஷனா 3பி, ஆர்.துர்க்கா 3பி, எஸ்.பானுசா 2பிசி, எஸ்.தனுசா 2பிசி, எஸ்.சதுசா பி2சி
**வணிகப்பிரிவு**
ரி.சுஜீவன் ஏ2சி, எஸ்.மிதுசன் ஏபிஎஸ், பி.மதுசியா 2பி எஸ்.
**கணிதப்பிரிவு**
ஆர்.துஷ்யந்தன் ஏபிசி, கே.சாரங்கன் ஏபிசி, கே.வித்தியா ஏ2சி, ஏ.அனுசன் ஏபிசி, எஸ்.தினேஷ் 2பிசி, ரி.நிதர்ஷன் 2பிசி, ரி.தஜீபன் 2பிசி, கே.சங்கவி பி2சி, ரி.தாரணி ஏசிஎஸ், எஸ்.கண்ணகி பாலன் 2பிஎஸ், ஆர்.வனஜா பிசிஎஸ், ரி.திலக்ஷன் பிசிஎஸ், ஆர்.மதுஷா பிஎஸ்
**உயிரியல் பிரிவு**
தி.கீர்த்தனா ஏ2பி ,ஜே.வினோதினி ஏபிசி, பி.பிரதா 2பிசி, எஸ்.சோபிதா பி2சி, எம்.ரம்மியா பி2சி, பி.அனுசியா 2சிஎஸ், ஏ.அஜிதா 2சி எஸ், கே.மோகனா 2சி எஸ், ஜி.அபர்னா 2சி எஸ்
**கலைப்பிரிவு**
எஸ். நல்விழி 2ஏபி, எஸ்.தக்ஷனா 2ஏபி, எஸ்.தபோதினி ஏபிசி, ஜே.சயந்தினி 2 ஏசி, கே.குயின்சி ஏ2பி, என்.பிரயுசா 2பிசி, கே.சுதர்ஷன் ஏபிசி, வி.சுகிர்தாஸ் ஏபிஎஸ், ஆர்.யாழினி ஏபிசி, என்.விஜயநந்தினி 2பிசி
**பொதுத்துறை -** வி.ஆதித்தன் பி2சி



புதுவருடத்தை முன்னிட்டு நேற்றுக் காலை நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளில் பொதுமக்கள் ஈடுபட்டனர். (ஐ)

# சில ஆளுநர்களே பதவி விலகினர்

## கிழக்கு மாகாண ஆளுநருக்கு அறிவுறுத்தல் கிடைக்கவில்லையாம்

கொழும்பு, ஜன. 02

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவின்அறிவுறுத்தலுக்கு அமைய சில மாகாண ஆளுநர்கள் பதவியில் இருந்து விலகியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனைத்து மாகாணங்களினதும் ஆளுநர்களை டிசெம்பர் 31ஆம் நாளுக்குள் பதவியில் இருந்து விலகுமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது செயலர் மூலம் அறிவித்திருந்தார்.

இதற்கமைய, வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

அனைத்து ஆளுநர்களையும் பதவி விலகுமாறு ஜனாதிபதி கேட்டிருப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

எனினும், கிழக்கு மாகாண ஆளுநர் றோகித போகொல்லாகம, பதவி விலகல் கடிதத்தைச்சமர்ப்பிக்கவில்லைஎன்று கூறப்படுகிறது.

பதவியில் இருந்து விலகுமாறு, ஜனாதிபதியிடம் இருந்து தமக்கு எந்த அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, வடக்கு மாகாண ஆளுநர் பதவியில் இருந்து றெஜினோல்ட் குரேயை நீக்கப்படுதற்குஎதிராகப்போராட்டம்ஒன்றை நடத்துவதற்கானதயார்ப்படுத்தல்களில், அவருக்கு சார்பாகச் சில தரப்புகள் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், சில அரசியல் கட்சிகள் அமைப்புகளைச் சேர்ந்தவர்களின்ஊடாக இந்தப்போராட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் கூறப்படுகிறது.

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சத்தியப்பிரமாண நிகழ்வு





முல்லைத்தீவு, ஜன. 02

2019 ஆம் ஆண்டுக்கான அரச அதிகாரிகளின் சத்தியப்பிரமாண நிகழ்வு நாடளாவிய ரீதியில் அரச திணைக்களங்களில் நேற்றுக் காலை இடம்பெற்றது

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அதிகாரிகள் நேற்றுக் காலை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்

மேலதிக மாவட்டப் பதிவாளர் ஜெ.கோபிநாத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய கொடிடை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இ.ரமேஸ் ஏற்றிவைத்தார்

அதனை தொடர்ந்து பிரதேச செயலக அதிகாரிகள் அனைவரும் இந்த ஆண்டுக்கான சத்தியப்பிரமாணத்தைச் செய்துகொண்டனர்

அதனைத் தொடர்ந்து பிரதேச செயலக வளாகத்தில் மரநடுகை நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது. (ஐ)

# மஹிந்தவுக்குச் சீனா புத்தாண்டு வாழ்த்து



கொழும்பு, ஜன. 02

சீன அதிபர் ஷி ஜின்பிங், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை கொடுத்த னுப்பியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் சந்தித்த சீனத் தூதுவர் செங் ஷியு வான், சீன அதிபரின் இந்த வாழ்த்து மடலை, நேரில் கையளித்துள்ளார்.

சீன அதிபரின் வாழ்த்துச் செய்தியை, சீனத் தூதுவர் தம்மிடம் கையளித்தார் என்று மஹிந்த தனது கீச்சகத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார். (ஐ)

# யாழ். மாநகர சபையிடம் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் செயற்றிட்டம் கிடையாது

## முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 02

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் விசேட செயற்றிட்டம் ஒன்று சபையால் இதுவரை அறிமுகம் செய்யப்படாத நிலை காணப்படுவதால் சபைக்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. ஆனால் யாழ். மாநகரின் தற்போதைய ஆட்சியாளர்கள் அது தொடர்பாக எதுவித முன்னெச்சரிக்கை செயற்பாடுகளையும்மேற்கொள்ளமுடியாத ஆளுமையற்றவர்களாக உள்ளனர். இதனால் இந்த நோயின் தாக்கம் எல்லை மிறிச் செல்லும் நிலை உரு வாகவுள்ளது என யாழ். மாநகரின் முன்னாளர் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்கணராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

தற்போது யாழ்.மாவட்டத்தில்தொடர்ச்சியாக மழை பெய்துவருகின்றது. இதனால் மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ளதாக வைத்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

வடபகுதியில் பருவமழை தற்போது உச்ச நிலையை அடைந்துள்ளது. யாழ். மாநகரசபையின் பல பாகங்களிலும் பல்வேறு நீர்வடிகால்கள் குப்பைகளுடன் நிரம்பிக்காணப்படுகின்றன. இந்நிலைமையானது நுளம்பின் பெருக்கம் அதிகரிக்க ஏதுவான நிலைகளை மாநகர சபை உருவாக்கியுள்ளதாகவே எண்ணமுடிகின்றது.

அதுமட்டுமல்லாது யாழ். மாநகருக்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் டெங்கு நோயின் தாக்கம் தற்போது அதிகதித்துள்ளது. பலர் யாழ். போதனா மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று அந்த நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை உறுதி செய்துள்ளனர். ஆனால் கடந்த வரவு–செலவுத் திட்டத்தில் கூட இதற்கான விசேட திட்டங்கள் எதுவும் யாழ் மாநகர சபையால் உள்வாங்கப்படாத நிலை காணப்படுகின்றது. இந்த அசமந்த போக்கு ஏன்?

பொது இடங்கள் மற்றும் மக்களுடைய வீடுகளுக்கு சென்று நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் சூழல் சுத்தமாக இருப்பதை உறுதி செய்ய விசேட செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.



ஆனாலும் அது அறிக்கை வடிவில் தான் உள்ளதே தவிர நடைமுறையில் காணப்படுவதாகவோ அன்றி அதை முன்னின்று அதற்கான துறை சார்ந்த தரப்பினர் நடத்துவதாகவோ இல்லை என்றே அறிய முடிகின்றது.

இதனிடையே யாழ் நகருக்குள் பெருமளவு மக்கள் தினசரி கூடும் நிலையில், பஸ் நிலையத்திற்குப் பின்னால் உள்ள பிரபல சைவ உணவகங்கள் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிக் வருகின்ற நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக சில உணவகங்களில் கழிவு நீர்த் தொட்டிகள் அமைக்கப் படவில்லை. சமையலறைக் கழிவுகள் நேரடியாக வெள்ள வாய்க்காலில் விடப்படுகிறது. இந்த உணவகங்கள் மீது எதுவித நடவடிக் கையும் எடுக்கப்பட வில்லை, ஆனாலும் குறித்த உணவகங் களுக்கு ஏ தர சான்றிதழ்கள் வழங்கப்பட் டுள்ளன.

இவ்வாறு சுகாதாரச் சீர்கேட்டுடன் நீர் வடிகான்களும் போதிய சுகாதார வசதிகளின்றிய நிலையில பல உணவகங்களும் உள்ள நிலையில் இவை தொடர்பாக யாழ்.மாநகர சபை யின் சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல் இருப்பது எதற்காக?

யாழ். மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகரித்து உள்ளதாக வீடுகளுக்குச் சென்று குற்றம் கண்டு பிடிக்கும் யாழ்.மாநகர சபை சுகாதாரப் பரிசோதகர்கள் இவ்வாறான பெரும் சுகாதாரச் சீர்கேடுகளைக் கண்டும் காணதது போல் நடந்து கொள்வது எதற்காக?

அந்தவகையில் மாநகரை அழகுபடுத்துவோம் என்று கூறி ஆட்சியை கைப்பற்றியவர்கள் தற்போது அதற்கான எந்தவொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் முயற்சிகளை கூட செய்யாதிருப்பது வேதனை யளிக்கிறது–என்றார்.

# செரீனா வில்லியம்ஸ் அதிரடி



8 நாடுகள் பங்கேற்கும் ஹோப்மன் கிண்ண ரெனிஸ் தொடரில் நேற்று முன் தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற போட்டியில் கிரீஸ் மற்றும் அமெரிக்க வீர, வீராங்கனைகள் மோதிக்கொண் டனர்.

இந்தத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரி வில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லி யம்ஸ் வெற்றி பெற்றுள்ளார்.

கிரீஸ் வீராங்கனை மரியா சக்கரியை எதிர் கொண்ட அவர் ரை பிரேக் வரை நீடித்த முதல் செட்டை போராடி 7-6 என கைப்பற்றினார்.

இதன் பின்னர் இடம்பெற்ற இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்திய செரீனா வில் லியம்ஸ் 6-2 என 2 ஆவது செற்றையும் கைப் பற்றி இலகுவாக வெற்றிபெற்றார்.

(ஐ)

# இளம் அதிரடி வீரருக்கு மீளவும் இலங்கை அணியில் வாய்ப்பு




நியூசிலாந்து அணிக்கு எதிரான இருபதுக்கு இருபது மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இலங்கைக் குழாமிலிருந்து அஞ்சலோ மத்தியுஸ் நீக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு பதி லாக சதீர சமரவிக்ரம அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

நியூஸிலாந்துக்கு சென்றுள்ள இலங்கை அணி நியூஸிலாந்து அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டி, மூன்று ஒருநாள் போட்டி மற்றும் ஒரு இருபதுக்க 20 போட்டிகளில் விளை யாடி வருகிறது.

இதில் நடைபெற்று முடிந்த டெஸ்ட் தொடரை நியூஸிலாந்து அணி கைப் பற்றியுள்ள நிலையில், இவ்விரு அணிகளுக்கிடையேயான ஒருநாள் மற்றும் இருபதுக்க 20 போட்டி இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் ஒருநாள் மற்றும் இருபதுக்க 20 போட்டியிலிருந்து அஞ்சலோ மத்தியுஸ் அணியிலி ருந்து நீக்கப்பட்டுள்ளார்.

நியூஸிலாந்துடனான இறுதி டெஸ்ட்போட்டியின்போதுமத்தியுஸிற்கு ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவரை அணியிலிருந்து நீக்கியுள் ளதாகவும், அவருக்குப் பதிலாக சதீர சமரவிக்ரம இணைத்துக் கொள்ளப்பட் டுள்ளதாகவும் இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

# ஐ.சி.சியின் இரண்டு விருதுகளை தட்டிச் சென்ற இந்திய வீராங்கனை

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா, ஐ.சி.சியின் இரண்டு விருதுகளை தட்டிச் சென் றார்.

சர்வதேச கிரிக்கெட் சபை ஒவ் வொரு ஆண்டும் மகளிர் கிரிக்கெட் டில் சாதித்த வீராங்கனைகளுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது.

அதன்படி 2018 ஆம் ஆண்டில் சாதனை படைத்த வீராங்கனை களுக்கான விருது பட்டியலை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இந்தப் பட்டியலில் 2018ஆம் ஆண்டின் சிறந்த மகளிர் கிரிக் கெட் வீராங்கனை மற்றும் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீராங்கனை ஆகிய இரண்டு விருதுகளை, இந்திய அணியின் நட்சத்திர வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா தட்டிச் சென்றுள்ளார்.

அதே போல் ஐ.சி.சியின் சிறந்த ரி-20 கிரிக்கெட் வீராங்கனை விருதிற்கு ஆஸ்திரேலிய வீராங் கனை ஆஸ்லே ஹீலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)





# அடிலெய்ட் ஸ்ரைக்கஸ் வெற்றி

பிக் பஷ் ரி-20 தொடரின் 14ஆவது லீக் போட்டியில், அடிலெய்ட் ஸ்ரைக்கஸ் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், அடிலெய்ட் ஸ்ரைக்கஸ் அணியும், சிட்னி தண்டர் அணியும் பலப் பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அடிலெய்ட் ஸ்ரைக்கஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய அடிலெய்ட் ஸ்ரைக் கஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 175 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாகக் கொலின் இங்ரம் 75 ஓட்டங் களையும், அலெக்ஸ் கெர்ரி 59 ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் டேனியல் சேம்ஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தி னார்.

இதனைத் தொடர்ந்து, 176 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி தண்டர் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இத னால் அடிலெய்ட் ஸ்ரைக்கஸ் அணி 20 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக கெல்யும் பெர்குசன் 47 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் பீட்டர் சிடில் 3 விக்கெட்டுகளையும், ரஷித்கான் 2 விக்கெட்டுக ளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அடி லெய்ட் ஸ்ரைக்கஸ் அணி சார்பில், 3 விக்கெட்டுகளை வீழ்த்திய பீட்டர் சிடில் தெரிவு செய்யப்பட்டார்.

(ஐ)

# ஆஸ்திரேலியாவில் காதல் மனைவியுடன் புத்தாண்டு கொண்டாடும் விராட்கோஹ்லி

இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லி தன்னுடைய காதல் மனைவி அனுஷ்காசர்மா வுடன், சிட்னியில் புத்தாண்டு கொண்டாடும்புகைப்படங்களை டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம்மேற்கொண்டுவிளையாடி வரும்இந்தியஅணி, 4போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று முன்னிலை வகிக்கி றது.

4 வது டெஸ்ட் போட்டியானது எதிர் வரும் 3ஆம் திகதி யன்று சிட்னியில் தொடங்க உள்ளது. இதற்காக இந்திய அணி வீரர்கள் சிட் னியில் முகாமிட்டுள் ளனர்.

இந்த நிலையில் இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லி, 2019ஆம் ஆண்டின்புத்தாண்டு தினத்தை தன்னு டைய மனைவியு டன் கொண்டாடும் புகைப்படங்களை டுவிட்டரில் பதி விட்டுள்ளார்.

அந்த பதிவில், 'இந்தியாமற்றும் உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். சிறப்பான ஆண்டாகஅமையகடவுள்ஆசிர் வதிப்பார்'' என்று பதிவிட்டுள் ளார்.



## குரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ஆளுநரின் கோரிக்கைக்கு அமைவாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலருணவுப் பொருள்களை ஏற்றிய ரயில் வருகை தந்த நேரத்தில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாணத் தொண்டராசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்று சேர்ந்து கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மீண்டும் றெஜினோல்ட் குரே வடக்கு மாகாணத்துக்கு ஆளுநராக வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய ஜனாதிபதிக்கான மனுவை மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கவனவீர்ப்பில் ஈடுப்பட்டவர்கள் கைய ளித்தனர்.

போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள், எமது தாய்மொழியில் எம்மோடு பேசிய றெஜினோல்ட் குரே எமக்கு வேண்டும், வடக்கின் தெற்கின் உறவின் பாலம் குரே, வடக்கு மாகாணத்தில் பல்வேறு சேவையாற்றிய றெஜினோல்ட் குரேயின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுங்கள், இனவாதம் இல்லாத ஆளுநர் குரே எமக்கு வேண்டும், அனைத்துமதங்களையும் சமமாகக் கருதும் ஆளுநர் குரே எமக்கு வேண்டும், வடக்கின் கல்வி மேம்பாட்டிற்கு பல்வேறு திட்டங்களை வகுத்த ஆளுநரே எமக்குவேண்டும் – போன்றவாசுங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (ஐ)

## ஐ.தே.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாகவும், இதன் போது அரசியலில் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விவாதிக்கவுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர்களில் ஒருவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் அமைச்சர்கள் அல்லது பிரதி அமைச்சர்களாக இருந்த ஸ்ரீ.ல.சு.க. 16 உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமை பெறும் நோக்கம் எதையும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் சுதந்திரக் காட்சியிலேயே தங்கியிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் தேர்தலில் போட்டியிட விரும்புகின்றனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகளால் அவர்கள் கவலையடைந்துள்ளனர்.

அவர்கள் மக்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் உதவிகளை செய்வதற்கும் தங்கள் தொகுதிகளில் பிற சலுகைகளை வழங்குவதன் மூலம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களைத் முன்னெடுக்கவுமே விரும்பினர். ஆனால் தற்போது அவர்கள் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தங்கள் வாக்காளர்களைச் சந்திக்க தயங்குகிறார்கள்.

அவர்கள் ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசில் இணைய தனது சம்மதத்தை ஜனாதிபதி வழங்கவேண்டும் என தெரிவிக்கின்றனர். தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அடுத்த நாடாளுமன்றத்தில் இருக்கமாட்டார்கள்.

எனவே, கட்சித் தலைவர்கள் இந்த அரசியல்வாதிகளின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடாது, அவர்கள் தங்கள் விருப்பப்படி ஒரு கட்சியில் சேர அனுமதிக்க வேண்டும் – என்றார். (ஐ)

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து மிக முக்கிய தகவல்கள் வெளிப்படுத்த வேண்டியுள்ளது என்று ஊழல் எதிர்ப்பு படையணியின் தலைவரான நாமல் குமார தெரிவித்தார்.

ஜனாதிபதியை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிதருமாறுகோரி ஜனாதிபதி செயலகத்திடம் நேற்று நாமல் குமார கடிதமொன்றை கையளித்தார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர்–

பிரபுக்கள் கொலை சூழ்ச்சி தொடர்பில் வெளிப்படையாக குறிப்பிட முடியாத சில தகவல்களும் இருக்கின்றன. ஜனாதிபதியை நேரில் சந்தித்து அவற்றை வெளிப்படுத்த முயற்சிக்கின்றேன்.

ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் நான் உயிரிழந்தாலும் பரவாயில்லை. சம்பந்தப்பட்ட தரப்புக்குத் தகவலை வழங்கிய திருப்தியாவது ஏற்படும். எனவே, சந்திப்புக்குரிய நேரத்தை ஒதுக்கி தருமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றேன் – என்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ குடும்பத்தைக் கொலை செய்வதற்கு சூழ்ச்சி வகுக்கப்பட்டது என்றும்,

இதன் பின்னணியில் பயங்கரவாதவிசாரணைப்பிரிவுக்கு பொறுப்பான முன்னாள் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா தொடர்புபட்டுள்ளார் என்றும் – நாமல் குமார திடுக்கிடும் தகவல்களை அம்பலப்படுத்தினார்.

இதையடுத்து இவ்விவகாரம் தெற்கு அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஏன்! ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்த பிரதான காரணிகளுள் இதுவும் ஒன்றாக மாறியது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஜனாதிபதியைக் கொலை செய்யச் சூழ்ச்சி வகுக்கப்படவில்லை என்று அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மிக முக்கிய தகவல்களை ஜனாதிபதியிடம் தெரிவிக்க வேண்டியுள்ளது என்று நாமல்குமார அறிவிப்பு விடுத்துள்ளார். (ஐ)

## சு.கவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட பஸில் ராஜபக்ஷ.

புத்தாண்டில் எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதற்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு எமது கட்சி தயார்நிலையிலேயே இருக்கின்றது. மக்கள் கூறுவார்களாயின் சு.கவுடன் கூட்டணி அமைக்கப்படும் என்று கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷவே கட்சியை வழிநடத்துவார். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நாட்டு மக்கள் எமது கட்சியையே விரும்புகின்றனர். எனவே, மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கவேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தான் இன்னும் சுதந்திரக்கட்சி உறுப்பினர் என்றும், வேறு எந்தக் கட்சியிலும் உறுப்புரிமை பெறவில்லை என்றும் குமார வெல்கம நேற்றுக் கருத்து வெளியிட்டார். (ஐ)

## சந்திரிக்காவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்களும், நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தாய்லாந்துக்கு ஒரு வார காலப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, சுதந்திரக் கட்சித் தலைமையகத்தை, மூடி வைக்க உத்தரவிட்டிருந்தார்.

தாய்லாந்தில் இருந்து மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நாடு திரும்பிய நிலையில், நேற்று சுதந்திரக் கட்சி தலைமையகம் மீண்டும் திறக்கப்பட்டது.

எனினும், சந்திரிகா குமாரதுங்கவையோ அவரது ஆதரவாளர்களையோ கட்சித் தலைமையகத்துக்குள் நுழைய அனுமதிக்கவேண்டாம் என்று, ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்துக்கு எதிராக சந்திரிகா குமாரதுங்கவும் அவரது ஆதரவாளர்களும், குழப்பங்களை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து தேர்தல்களில் போட்டியிடப் போவதாக கடந்தவாரம் ஜனாதிபதி அறிவித்திருந்தார். அதையடுத்து, சுதந்திரக் கட்சிக்குள் எதிர்ப்பு உருவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்கு குழுவொன்று முயற்சித்து வருவதாக புலனாய்வு அறிக்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக முன்னர் களமிறக்கும் விடயத்தில் சந்திரிகா அம்மையார் முக்கிய வகிபாகத்தை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிளிநொச்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ள நிவாரணம் வழங்குவதற்காக, ரயில்வே திணைக்களமும் ஜனாதிபதி செயலகமும் இணைந்து சேகரித்த ஒரு தொகுதி உலருணவு பொருட்கள் நேற்று ரயில் மூலம் முல்லைத்தீவு, கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான உலருணவுப் பொருள்கள் ரயிலில் கொண்டு வரப்பட்டு மாங்குளம் ரயில் நிலையத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்ட செயலாளர் கோ.தனபாலசுந்தரம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலார் திரு இ.ரமேஸ், முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பொருள்களை பெற்றுக்கொண்ட முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பொருள்களைச் சேகரித்து அனுப்பி வைத்தவர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு பொருள்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்துக்கான நிவாரணப் பொருள்கள், கிளிநொச்சி ரயில் நிலையத்தில், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளிக்கப்பட்டன. (ஐ)

## தனிக்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் இனி அமையவேண்டும். அப்போதுதான் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணி அர்த்தமுள்ளதாகவும், நீடித்து நிலைக்க கூடியதாகவும் அமையும்." – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட எம்.பியுமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டி திகணையில் நேற்று முன் தினம் நடைபெற்ற அரசியல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு–

நாட்டில் அரசியல் நெருக்கடி தலைதூக்கியபோது, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக மஹிந்த அணியால், எம்.பிக்களின் தலைக்குக் கோடி கணக்கில் விலைநிர்ணயிக்கப்பட்டது. பணத்துக்கும், பதவிக்கும் ஆசைப்பட்டு ஐ.தே.க. எம்.பிக்கள் சிலர் துரோகத்துக்கு துணைபோனார்கள்.

எனினும், பங்காளிக்கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு இரவு – பகல் பாராது கடுமையாக உழைத்தனர். ஜனநாயகத்தின் பக்கம்நின்ற ஐ.தே.க. எம்.பிக்களுடன் இணைந்து நீதிக்காகக் குரல் எழுப்பினர்.

ஜனநாயகமா? பணநாயகமா? – என்ற தேர்வில் மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து ஜனநாயகத்தின் பக்கம் நாம் நின்றோம். அன்று எம்மிடம் கொஞ்சிப்பேசிய ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர், அமைச்சரான பின்னர், எம்மை மறந்துவிடக்கூடாது. அத்துடன், ஐ.தே.க. அல்லாத உறுப்பினர்கள் எதையும் கெஞ்சிதான் பெறவேண்டும் என நினைத்து விடக்கூடாது.

கட்சி அரசியலுக்கு அப்பால், நாட்டில் நல்லாட்சி மலரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான் ஐக்கிய தேசியக்கட்சிக்கு மக்கள் வாக்களித்தனர். எனவே, மக்கள் ஆணையைமீறும் வகையில் புதிய அரசு செயற்படக்கூடாது.

ஐக்கிய தேசியக்கட்சியால் அதன் பங்காளிக்கட்சிகளுக்கு எதுவும் செய்யப்படவில்லை என நான் கூறமுற்படவில்லை. இன்னும் பல விடயங்கள் செய்ய வேண்டியுள்ளன என்பதையே வலியுறுத்திக்கூறுகின்றேன். எல்லாம் நடந்து முடிந்த பின்னர் ஓலமிடுவதைவிட, முன்னெச்சரிக்கை விடுத்து, உஷார் படுத்துவதே இராஜதந்திர அரசியலாகும். அதையே நான் செய்துவருகின்றேன்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அமைச்சரவை மற்றும் இராஜாங்க, பிரதியமைச்சுகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. தனியாட்சி அமையும் பட்சத்தில் அமைச்சரவை எண்ணிக்கை 30 ஐயும், ஏனைய அமைச்சுகளின் எண்ணிக்கை 40 ஐயும் விஞ்சுதலாகாது என தெளிவாக கூறப்பட்டுள்ளது.

எனவே, அமைச்சர்களின் எண்ணிக்கையை தூக்கிப்பிடித்து அது பற்றியே பேசினால் அரசு மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும். ஆகவே, எஞ்சியுள்ள காலப் பகுதியில் மக்களுக்கு கடந்த காலத்தைவிட சிறப்பான சேவைகள் வழங்கப்படவேண்டும்.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு உட்பட மலையக மக்களின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவேண்டும். எவ்வித பாகுபாடுமின்றி தொகுதிகளுக்குரிய நிதி ஒதுக்கப்படவேண்டும்.

கட்சி அரசியலுக்கு அப்பால் மக்கள் அரசியலை மையப்படுத்தியே தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கடுமையான அரசியல் தீர்மானங்களை எடுக்கநேரிடும்." என்றார் வேலுகுமார் எம்.பி. (ஐ)

## ஒருமித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடந்த ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களுக்கிடையிலான கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக 'லங்காதீப' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசமைப்பில், பௌத்த மதத்துக்கான முன்னுரிமை தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய, 9 ஆவது பிரிவில் எந்த மாற்றமும் செய் வதில்லை என்று இந்தக் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பில், அரசு தொடர்பான பிரிவில், இலங்கை ஒரு ஒற்றையாட்சி அரசு என்று, சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் குறிப்பிடுவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பௌத்த மதத்துக்கான முன்னுரிமை மற்றும் ஒற்றையாட்சி தொடர்பான விடயங்களில் எந்த மாற்றங்களும் செய்யப்படாது என்று உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒற்றையாட்சி என்பதற்குப் பதிலாக 'எக்கிய ராஜ்ஜிய' என சிங்களத்திலும் 'ஒருமித்த நாடு' என தமிழிலும் குறிப்பிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 90 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையப் பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொள்ளும் நோக்குடன் வந்த கும்பலை அந்தப் பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து நேற்று மதியம் மடக்கி பிடித்தனர்.

சுமார் 30 மோட்டார் சைக்கிள்களில் 90 பேர் கொண்ட கும்பல், வாள்களுடன் வருகை தந்தது.

அதன்போது அங்கு கூடிய அந்தப் பகுதி பொதுமக்கள் தாக்குதல் மேற்கொள்ள வந்த கும்பலை மடக்கிப் பிடிக்க முற்பட்டுள்ளனர். அப்போது கும்பல் தப்பிச் செல்ல முயன்றது. தமது 7 மோட்டார் சைக்கிள்களைக் கைவிட்டுச் சிலர் தப்பி ஓடியுள்ளனர். தப்பியோடியவர்களில் நால்வரை ஊரவர்கள் ஒன்றிணைந்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

தம்மால் பிடிக்கப்பட்ட வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்த நால்வரையும், மீட்கப்பட்ட 07 மோட்டார் சைக்கிள்களையும் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் அந்தப் பகுதி மக் கள் ஒப்படைத்தனர்.

நால்வரையும் கைது செய்த பொலிஸார் ,பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். மீட்கப்பட்ட 7 மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், தப்பி சென்றவர்களையும் கைது செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# புதிய அரசமைப்பு ஊடாக தீர்வு வர வாய்ப்பு இல்லை

## அடித்துக் கூறுகிறார் சுரேஷ்



யாழ்ப்பாணம், ஜன. 02

புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழர்களுக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த சில நாட்களில் நாட்டின் அரசியலில் ஏற்பட்ட மாற்றத்திற்கு கூட்டமைப்பு தனது முழுப்பங்களிப்பினை வழங்கியதன் மூலம் மீண்டும் ரணில் தலைமையிலான ஆட்சியைக் கொண்டு வந்தது.

எனவே இந்தக் காலப்பகுதியில் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான தீர்வு உள்ளிட்ட விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இந்தக் காலப்பகுதியில் தேவையான அழுத்தங்களைப் பிரயோகித்து எமக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் வேறு எந்தக் காலப்பகுதியிலும் பெற்றுக் கொள்ளமுடியாது.

எதிர்வரும் ஆண்டு தேர்தல் ஆண்டாக அமையவுள்ளதால், ரணில் உள்ளிட்ட தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் தமது வாக்கு வங்கியினைக் கருத்தில் கொண்டு தமிழர்களின் தீர்வு விடயத்தில் சாதகமான முடிவுகளை எடுக்கமாட்டார்கள். ஏனெனில் இவ்விடயம் தென்னிலங்கையில் மஹிந்த அணியினர் உள்ளிட்ட எதிர்த்தரப்பினருக்கு எதிர்ப்பிரசாரத்தினை மேற்கொள்வதற்கு வழிசமைக்கும் – என்றார்.

(ஐ)

# யாழ்ப்பாண நீதிமன்றங்களில் நேற்று பணியாளர்கள் புத்தாண்டு உறுதியுரை





யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்திலுள்ள நீதிமன்றங்களின் மேல் நீதிமன்ற நீதிபதி, நீதிபதிகள் உள்பட உத்தியோகத்தர்கள், அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக நேற்றுக் காலை 9 மணிக்கு உறுதியுரை எடுத்தனர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன், யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் மற்றும் யாழ்ப்பாணம் தொழில் நியாயச் சபையின் தலைவர் வெள்ளத்தம்பி முகமெட் சியான் ஆகியோர் பங்கேற்றனர்.

தேசியக் கொடியேற்றப்பட்டுத் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன், கணக்காளர் வி.ரதீஸ் மற்றும் உத்தியோகத்தர்கள் நீதிபதிகள் முன்னிலையில் உறுதியுரையை நிறைவேற்றினர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மற்றும் யாழ்ப்பாணம் தொழில் நியாய சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

(ஐ – 07)

## முதலாம் தவணை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 02

நாட்டிலுள்ள அரச பாடசாலைகள் அனைத்தும் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று ஆரம்பமாகவுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் 3 ஆம் தவணை விடுமுறைக்காக சகல அரச பாடசாலைகளும் நவம்பர் 30 ஆம் திகதி மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருமுறிகண்டியில் 27மாடுகள் ரயிலுடன் மோதி அவலச்சாவு



முறிகண்டி பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் ரயில் மோதி 27 இற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளன. மேலும் பல மாடுகள் காயமடைந்தன. ஸ்கந்தபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர் ஒருவர் தனது கால்நடைகளை திருமுறிகண்டிப் பகுதியில் வைத்துப் பராமரித்து வந்துள்ளார்.

நேற்று கால்நடைகளை மேய்ச்சலிற்காகத் திறந்து விட்ட நிலையில், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலில் இந்தக் கால்நடைகள் மோதி மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

# ஐ.தே. மு. அரசுக்கு ஆதரவளித்தாலும் கூட சு.கவுக்கு எதிராகச் செயற்பட மாட்டேன்!

## விஜித் விஜேமுனி சொய்ஸா கூறுகின்றார்



எந்த சந்தர்ப்பத்திலும் சுதந்திரக் கட்சிக்கோ அல்லது கட்சியின் தலைமைத்துவத்திற்கோ எதிராகத் தாம் செயற்படப்போவதில்லை என அண்மையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜேமுனி சொய்ஸா தெரிவித்தள்ளார்.

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினாலும் சுதந்திர கட்சியில்தான் தொடர்ந்தும் இருக்கின்றேன் எனவும் கண்டி தலதா மாளிகையில் வழிபாடுகளை முடித்துவிட்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் கூறியுள்ளார்.

அமைச்சுப் பதவியை எதிர்பார்த்து ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்துக்கு அவர் ஆதரவு வழங்க தீர்மானித்திருந்தார். இருப்பினும், ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சென்றவர்களுக்கு அமைச்சுப் பதவியை வழங்குவதில்லையென அறிவித்ததனால் இவருக்கு அமைச்சுப் பதவி கிடைக்காமல் போனதாகக் கூறப்படுகின்றது.

இருப்பினும், தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதனால், அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரிடத்திலும் இன்னும் அமைச்சுப் பதவிக்கான எதிர்பார்ப்பு நிலைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## அர்ஜுன் அலோஸியஸ், பலிசேனா இருவருக்கும் நேற்று பிணை அனுமதி

### சுமார் ஒரு வருட விளக்கமறியலின் பின்னர்




மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் என தெரிவித்துக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பேபர்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் அதன் பொதுமுகாமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோருக்கு நேற்று பிணை அனுமதி வழங்கப்பட்டது.

இவர்கள் நேற்று மீண்டும் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது.

இருவரும் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கொள்ளுப்பிட்டி, மல்பாரவில் அமைந்துள்ள அவர்களது வீட்டில் வைத்தே இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து இருவரும் நீதிமன்ற உத்தரவுப்படிதொடர்ந்து சுமார் 11 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நாட்டை விட்டு வெளியேறத் தடை என்பது உட்பட பல்வேறு நிபந்தனைகளுடனேயே இவர்களுக்குப் பிணைஅனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நிதி அமைச்சரிடம் ஊடகத் துறையா? பெரும் வேடிக்கை என்கிறார் பந்துல!

ஜனநாயக நாடொன்றில் நிதி மற்றும் ஊடகத்துறை என்பன ஒரே அமைச்சின் கீழ் செயற்படுவது சாத்தியமற்றதாகும். நாட்டில் பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடிகள் காணப்படுகின்ற போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களை கறுப்பு ஊடகம் என விமர்சித்துக் கொண்டிருக்கின்றார். அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஊடகத்துறை காணப்படுவது ஊடகங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில் –

கூட்டு எதிர்கட்சியின் சார்பில் நிதி அமைச்சர் மங்கள சமவீரவுக்கு எதிராக நான் வழக்கு தொடரவுள்ளேன். காரணம் ஜனநாயக நாட்டில் நிதி மற்றும் ஊடகத்துறை ஒரே அமைச்சின் கீழ் செயற்பட முடியாது. எனவே ஊடகங்களைக் கறுப்பு ஊடகம் என விமர்சிப்பதையும், அவற்றை கட்டுப்படுத்துவதையும் இந்த வருடத்தில் மங்கள சமரவீர கைவிட வேண்டும்.

அமைச்சரவை மற்றும் அது தொடர்பான வர்த்தமானி வெளியிடும் அதிகாரம் ஜனாதிபதியிடம் காணப்படுகின்றது. எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்றார்.

(உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள கலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.